
டெக்ஸ் வில்லர் தோன்றும்
தலை வாங்கிக் குரங்கு!
லயன் காமிக்ஸ்
ரூ. 3/-
தீபாவளி ஸ்பெஷல்!



விரைவில் வருகிறார்!
வால்ட் டிஸ்னியின்
ஈகிள் மேன்
லயன் காமிக்ஸின்
மற்றும் ஒரு புதுமை அறிமுகம்!

# டெக்ஸ் வில்லர் தோன்றும்

# தலைவாங்கிக் குரங்கு!



துப்பாக்கி வீரர் டெக்ஸ்வில்லர் - ரேஞ்சர் உளவுப் பிரிவின் தலை சிறந்த ஏஜெண்ட்! அநீதியையும், அக்கிரமங்களையும் கண்டால் கொதித்தெழும் வீரர் இவர், நீதிக்கும் நேர்மைக்கும் அயராது போரிடும் இவரது சாகஸங்கள், காமிக்ஸ் உலகில் புதியதொரு சகாப்தமாய் அமையப் போவது உறுதி! தொடர்ந்து படியுங்கள்.


செவ்விந்தியர்கள் எழுப்பும் முரசொலி அல்ல அது- வித்தியாசமான ஒன்று!
கிளம்பு டைனமைட்! இங்கே ஏதோ அசம்பாவிதம் நடக்கிறது...அங்கே முரசொலி எழுப்புவது யாரென்று போய் பார்க்கலாம்!
முரசொலி சட்டென்று ஓய்ந்து போனது...அதே சமயம் வழிப் போக்கர்களின் முகாம் ஒன்று டெக்ஸ்வில்லரின்பார்வையில்பட்டது...
யாரோ வருகிறார்கள்!
ஸ்லிம்மாகத் தானிருக்கும்!
நல்ல வேளை!


பொங்கல் ஸ்பெஷல்!
விபரங்கள் அடுத்த இதழில்



யாரது -
ஸ்லிம்மா...?
இல்லை...
நண்பர்களே!
?
நில்...
அங்கே!
நகர்ந்தாயோ,
நொடியில் பிண
மாகிப் போவாய்!
வீணாக அலட்டிக்கொள்ள
வேண்டாம். துப்பாக்கியை
நீட்ட வேண்டிய அவசியமே
கிடையாது!
யார்... நீ?
பெயர்- டெக்ஸ் வில்லர்!
பலோ வெர்டிலிருந்து
வருகிறேன்!
கைகளை மேலே தூக்கிய
வாறு மெள்ள முன்னேறி
வா!
இங்கே என்னதான் நடக்கிறது?
ஐந்துபேர் இருக்கிறீர்கள்-
ஒற்றை மனி
தனைக் கண்டு
இத்தனை
பயமா!
போதும்
கிண்டல்!
இப்படி அஞ்சி நடுங்கும் கும்பலை இதுவரை
நான் பார்த்ததேயில்லை!
மூடு வாயை -
இறங்கி வா
இப்படி!


நானொரு சாந்தமான ஆசாமி... நீங்கள் துப்பாக்கியின் விசையிலிருந்து விரலை எடுத்துவிடலாம்!
சொன்ன படி செய்!
மறுகணம் - அந்த சாந்தமான ஆசாமி மின்னல் வேகத்தில் செயல்பட்டார்...
ஆஹ்!
டமீல்!
கைகளை தூக்குங்கள் மேலே!
யாரையும் துன்புறுத்துவது என் நோக்கமல்ல... ஆனால் விஷமம் பண்ண முயன்றீர்களோ சுட்டுத் தள்ளிவிடுவேன் ஜாக்கிரதை!
?
!
?
இப்போது சொல்லுங்கள்- என்னிடம் கோபப்பட்டது எதற்கென்று!
?!?!
என்ன - பதிலைக் காணோம்?
ம்...வந்து - உங்களை ஒன்று கேட்கலாமா?


ஒரு கூக்குரலையும் அதைத்தொடர்ந்து முரசொலியையும் சற்று முன் கேட்டீர்களா?
ஆமாம்- அதற்கென்ன?
துப்பாக்கிகளை உறையில் போடுங்கள்... எங்களால் எந்த தீங்கும் நேராது உங்களுக்கு!
மிக்க மகிழ்ச்சி!
ஜக்கில் இன்னும் கொஞ்சம் காப்பி மீதமிருக்கிறது. கோப்பையில் அதை உங்களுக்கு ஊற்றிக்கொண்டு கைகளை நான் கீழே இறக்கலாமா?
ஓ...யெஸ்!
உங்களிடம் முறைப்பாக நடந்து கொண்டதற்காக வருந்துகிறோம்... நாங்கள் குழம்பிப்போயிருக்கிறோம்?
உங்கள் தோழன் ஸ்லிம்மைப் பற்றிய கவலையோ?
ஹூம்...இனி கவலைப்பட்டு என்ன செய்வது- நாங்கள் அனுதாபப்படத்தான் முடியும்!
முரசொலியைக் கேட்டோம். ஒரு வேளை எங்கள் அனுமானம் தவறாக இருக்கக்கூடும் என்று நினைத்தோம்!
எங்கள் அனுமானம் உறுதியாகி விட்டது இப்போது! விடியும்வரை காத்திருந்து ஸ்லிம்மின் பிணத்தைத் தேடிக் கண்டுபிடிப்பதுதான்!



ஏன் இப்போதே சென்று நாம் தேடக்கூடாது?
ஊஹூம்...பயனிருக்காது - அத்தோடு, ஆபத்தும் கூட!
ஸ்லிம் தன் முட்டாள் தனத்தினால் உயிரை பறிகொடுத்து விட்டான். எங்களோடு தங்கியிருந்து விடிந்த பின் மோர்லோஸ் நோக்கிச் செல்ல பொறுமை இல்லை அவனிடம்!
மிஸ்டர் வில்லர் என் பெயர் ரென்னி ரெயின்போ பண்ணையின் சொந்தக்காரன்...இவர்கள் என் ஊழியர்கள்.
உங்கள் அறிமுகம் கிடைத்ததற்கு மகிழ்ச்சி!
ஸ்லிம் இறந்திருப்பான் என்று உறுதியாக நம்ப காரணம் என்னவென்று நீங்கள் இன்னமும் சொல்லவில்லையே!
நீண்ட கதை அது!
விடிய இன்னும் நேரமிருக்கிறது. ஏற்கனவே முரசொலி கேட்டு விட்டபோதிலும் இனி யாரும் இங்கே தூங்கப்போவது கிடையாது...
?
நாங்கள் ஏன் அப்படியொருவித்தியாசமான வரவேற்பு கொடுத்தோம் என்பதற்கான காரணமும்...
ஸ்லிம் மாண்டுபோயிருக்கக் கூடும் என்று உறுதியாக நாங்கள் நம்புவதற்கான காரணமும் உங்களுக்கு விளங்கும்!
ஓகோ...!



பேய். பிசாசுகளில் உங்களுக்கு நம்பிக்கை உண்டா?
சாண்டா க்ளாஸை நம்பும் அளவுக்கு உண்டு!
எதிர்பார்த்த பதில் தான்! ஆனால் தலைவாங்கியைப் பற்றி கேள்விப் பட்டால் உங்கள் கருத்து மாறக் கூடும்!
சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஒருநாள் - லஷ் க்ரீன் பண்ணையைச் சேர்ந்த வேலையாள் ஸ்ட்ரீம்லேன் ஆற்றோரம் வெட்டி கொலைசெய்யப் பட்டுக் கிடந்தான்!
அவனுடைய உடல் அங்கே கிடந்ததே தவிர தலையை காணவேயில்லை!
அப்படியா!
இடம் ஈரப்பாங்காக இருந்தும் கொலையாளியின் காலடித்தடங்களை ஆராய்ந்துஎந்த ஒரு விளக்கமும் பெற முடியவில்லை!
காலடி தடங்களே இல்லையா...?
இருந்தன- பிளவுபட்ட குளம்புகளின் வடிவமைப்பில்! ஆற்றின் நீரோட்டம்வரை சென்ற அந்த தடங்கள் அத்தோடு முடிந்துவிட்டிருந்தன...
...ஆற்றின் மறுகரையிலும் தேடிப் பார்த்தோம் - பலனிருக்கவில்லை!
வித்தியாசமாக இருக்கிறதே!
இச்சம்பவம் ஒரு தொடக்கமாக அமைந்தது!
ஒருசுரங்கத்தொழிலாளிக்கும் இதே கதிதான் நேரிட்டது... வெட்டப்பட்ட அவனுடைய தலையும்காணப்படவேயில்லை!



இம்முறையும் காலடித் தடங்கள் ஆறுவரை சென்று நின்று விட்டிருந்தன!
கொலையாளி அகப் படவேயில்லை-யாக்கும்?
ஆமாம் ஆற்றின் இருகரைகளிலும் அங்குலம் அங்குலமாகத் தேடிப்பார்த்துவிட்டோம். ஆற்றின் நீரோட்டம் வரை சென்ற காலடித் தடங்கள் பின்னர் வெளியேறி தொடரவேயில்லை!
விஷயம் இத்தோடு முடிந்துவிடவில்லை.
ஆச்சர்யம்தான்...
இதுவரை மொத்தம்பத்து பேர் இம்மாதிரி மர்மமான முறையில் இங்கே கொலை செய்யப்பட்டிருக் கிறார்கள்...
ஆண்டவனே!
நாங்கள் அஞ்சுவதுபோல் அசம்பாவிதம் நிகழ்ந்து விட்டிருந்தால் ஸ்லிம் பதினோராவது நபர்!
ம்ம்...!
நான் நிறையக் கதைகள் கேட்டிருக் கிறேன்... ஆனால் இந்தக் கதை ரொம்பசுவாரஸ்யமாக இருக்கிறது!
இது வெறும் கட்டுக் கதை அல்ல... வில்லர்!
ஸாமுக்கு கிடைத்தது போல் உங்களுக்கும் அந்தப் பிசாசை நேரில் காண ஒரு சந் தர்ப்பம் கிடைத்தால் இதை கதை என்று சொல்லமாட்டீர்கள். இந்த சமவெளிப்பகுதி யில் இரவில் தனித்து வரும் எந்த ஒரு நபரும் உயிரோடு ஊர்போய் சேர்ந்ததில்லை.
ஓகோ... அந்த கொலைகாரனை யாராவது பார்த்திருக்கி றார்களா?


இன்றைக்கு சுமார் ஆறு மாதங்களுக்கு முன் ஒருநாள் ஸாம் மோர்லோஸ் நகருக் குள் தன் கோச்சு வண்டியை விரட்டிக் கொண்டு வந்த வேகத்தில் தறிகெட்டுப் போய் ஜட்ஜின் வீட்டு முகப்பில் போய் மோதிக் கொண்டு விட்டான்.
ஏன் அப்படி தலைதெறிக்க வந்தான் என் றறிய ஜனங்கள் வெளியேறி வந்துபார்த் தபோது தான் தலைவாங்கியை பார்த்த தாக அலறினான் ஸாம்
பிசாசு! நா...நான் பி...பி... பிசாசைப்...பார்த்தேன்!
நான் தலைவாங்கியை பார்த்தேன்...நே... நேரில் பார்த்தேன்!
பதறாதே ஸாம்!
முதலில் கொஞ் சம் மது அருந்து வா உள்ளே!
அழைப்பிற்கிணங்கி உள்ளே சென்ற ஸாம் கொஞ்சம் மது அருந்தி தன்னை ஆசுவாசப் படுத்திக்கொண்ட பின் அல்மைரா ரோட் டில் தான் தலைவாங்கியை சந்தித்த விபரத்தை விளக்கினான்.
கொலைகாரன் ஒரு வாலில்லாக் குரங்கு போ லிருந்தான் என்றும், முரட்டுக் குதிரையில் வந்த அவன் கையிலிருந்த வாளை சுழற்றிக் கொண்டு வந்தான் என்றும் விவரித்தான்—
பயங்கரமாக உறுமிக் கொண்டு அந்தப் பிசாசு தன் கோச்சு வண்டியை நோக்கி விரைந்து வருவதைக் கண்ட ஸாம் தன் குதிரைகளை விரட்டிக்கொண்டு வந்திருக் கிறான்!


மூச்சிறைக்க ஓடோடி வந்த குதிரைகள் இரண்டும் நகருக்குள் வந்ததும் கீழே விழுந்து உயிரை விட்டுவிட்டன என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்
விடிந்ததும் ஷெரீப் உதவியாளர்களை அழைத்துக் கொண்டு அந்தப் பிசாசை தேடிச் சென்றார்- இம்முறை அந்த விநோதமான காலடித் தடங்கள் ஆறுவரை சென்று பின்னர் காணாமல்போய் விட்டிருந்தன.
ம்...!
அதன்பின் நேற்றுவரை யாருமே இந்தப்பிராந்தியத்தில் இரவில் தனித்துச் செல்ல துணியவில்லை... இன்று ஸ்லிம் தன் பொறுப்பற்ற தனத்தினால் உயிரை போக்கிக் கொண்டு விட்டான்.
அதெப்படி உறுதியாக சொல்ல முடியும்?
என் கூற்று சரி எனபது விடிந்ததும் தெரிந்துவிடும்... தலைவாங்கிக் குரங்கு தன் முரசை அடித்தால் அது ஒரு மனிதனை பலி கொண்டுவிட்டதாக அர்த்தம்.
இப்போது விளங்குகிறதல்லவா நாங்கள் ஏன் கலவரப் பட்டு குழம்பிப் போயிருக்கிறோம் என்று!
ம்...புரிகிறது!
ஆனாலும் எனக்கு இன்னும் ஆவிகளைப் பற்றி நம்பிக்கை ஏற்படவில்லை...
ஆவிகள் இருப்பதாகவே வைத்துக்கொண்டாலும் அவை இப்படி இரத்த வெறி பிடித்து அலைவதில்லை... மேலும் - ஆவிகள் காலடி தடங்களை விட்டுச் செல்வதில்லை.
?
!


ஆனல் இந்த காலடித்தடங்கள் பிசாசின் காலடித் தடங்களே தான்!
இருக்க முடியாது!
காலடித் தடங்களை ஆடுகள் கூடத்தான் ஏற்படுத்துகின்றன.
தடங்கள் ஆற்றினுள் போய் மறைந்து விடும் மர்மத்துக்கு என்ன சொல்வீர்கள்?
இப்போதைக்கு ஒன்றும் கூற முடியவில்லைதான். ஆனல் நிச்சயம் கண்டறியத்தான் போகிறேன்...!
ஹூம்...!
மற்றவர்களுக்கு நேர்ந்த கதி தான் உங்களுக்கும் நேரும்!
ஸ்லிம் பிசாசுக் குரங்கை தேடிக்கொண்டு போனுனு?
இல்லை...அப்படியொரு பிசாசு கிடையாது என்பது அவனுடைய கூற்று...
யாரோ ஒரு பைத்தியக்காரன்தான் அப்படி அலைந்து கொண்டிருக்கக் கூடும் என்றும், அவனை சந்திக்க நேர்ந்தால் தன் துப்பாக்கிகளை பயன்படுத்தப் போவதாகவும் சொல்லிச் சென்றன்...
நாம் ஸ்லிம்மை கண்டுபிடிக்க முடிந்தால் அவனுடைய ஆறு துப்பாக்கிகளுமே அவனைக்காப்பாற்றபயன்படாமல் போய்விட்ட உண்மையை அறிந்து கொள்ள முடியும்!
ம்... சற்று நேரத்தில் விடிந்து விடும் - அத்தோடு விஷயமும் தெளிவாகிவிடும்!



இரண்டு மணி நேரத்திற்குப்பின் தேடும் படலம் தொடங்கியது...ஸ்லிம்மின் உடலை கண்டுபிடிப்பதில் அத்தனை சிரமம் இருக்கவில்லை.
அதோ...!
அவனே தான்!
அருகில் சென்று பார்த்தார்கள்...
சந்தேகமேயில்லை...
பாவிப் பயல்!
பிசாசு இங்கே அலைந்து கொண்டிருப்பதை இப்போதாவது நம்புகிறீர்களா வில்லர்?
ஆவிகளைப்பற்றி நான் நம்பத் தயாரில்லை.
இல்லை... இரத்தவெறி பிடித்த பைத்தியக்காரன் ஒருவனின் வேலை இது என்பது என் எண்ணம்.
அப்படியானால் ஆசாமியை கண்டு பிடிக்க உங்களால் இயலுமா?
14


நிச்சயமாக!
முயற்சிசெய். கொலையாளி இரத்தத் தாலும் சதையாலும் ஆனவன் தான் என்று நிரூபித்து விட்டால் என் தொப்பியை நான் தின்று விழுங்கத்தயார்!
பொறு ரென்னி...தொப்பி ரொம்ப கடின மானது - லேசில் தின்ன முடியாது!
அந்தப் பிசாசை கண்டுபிடிப்பது மட்டும் சுலபமான வேலையா என்ன!
இதோ...அதன் காலடி தடங்கள்!
ஆமாம்...!
நீ விவரித்த மாதிரியே இருக்கிறது!
நீங்கள். இங்கேயே இருங்கள்... இதைப்பற்றி ஆராய்ந்துவிட்டு வருகிறேன் நான்.
இரண்டு தொகுதி கால்தடங்கள் தெரிகின்றன... நான்கு கால் களையுடைய மிருகத்தினுடை யது ஒன்று- இன்னொன்று இரண்டு கால் களையுடையது- இரண்டுமே பிளவுபட்ட அமைப்புக் கொண்டவை!
இதோ இங்கே தலைவாங்கி தன் குதிரையை விட்டுகீழே இறங் கியிருக்கிறான்...
இந்த இடத்தில் நின்று ஸ்லிம்மின் தலையை கொய்திருக்கிறான்...



ஆக ஸ்லிம் தன் உயிரை இழப்பதற்கு முன் குதிரையிலிருந்து கீழே விழுந்திருக்கவேண்டும்.
பயத்தில் மிரண்டுபோய் அவன் அவ்வாறு கீழே விழுந்திருக்கலாம்...
அடுத்து -
என் கூட வாருங்கள்!
காலடித் தடத்தின் மீது பார்வையை பதித்தவாறு மெள்ள நடந்து சென்றார் டெக்ஸ்-வில்லர் சுமார் இரண்டு-மணி நேரத்திற்குப் பின்...
இதுதான் ஸ்ட்ரீம் லைன் ஆறு?
ஆமாம்...காலடித் தடம் இத்தோடு முடிந்துவிட்டது பார்த்தீர்களா!
ஆனால் முயற்சியை நான் கைவிடுவதாக இல்லை.
ஆனால் வில்லரின் முயற்சி எவ்வித பயனும் அளிக்கவில்லை. அவர்கள் ஒரு நீர்த் தேக்கத்தின் அருகே வந்து சேர்ந்தனர்...
ஒத்துக் கொள்கிறீர்களா?
அவசரப் படாதீர்கள்!


இது கழுகுக்குளம்தானே?
ஆமாம்.
அதோ அந்தப் பாறை பறக்கப்போகும் கழுகைப் போல் தோற்றமளிப்ப தால் குளத்துக்கு அந்தப் பெயர் வந்தது.
இந்த இடத்தைப்பற்றி ஒரு கதை வழக்கிலிருக்கிறது...
செவ்விந்தியர்களுக்கு இந்த இடம் ஒரு புனித ஸ்தலமாக இருந்து வந்ததாம், வெள்ளையர் இங்கே வந்ததும் பூமி பிளந்து வெள்ளம் ஏற்பட்டதாம்...
இந்த நீர்த்தேக்கம் ஏற்பட்டு இதிலிருந்து ஓடும் நீர் ஸ்ட்ரீம்லைன் ஆறாகியதாம் - இந்தக் கதைக்கு ஆதாரம் ஏதும் கிடையாது!
செவ்விந்தியர் பிறகு இங்கே திரும்பி வந்தார்களா?
வசந்த காலத்தில் ஓரிருவர் வந்து இங்கே நீராடிவிட்டுச் செல்வதுண்டு என்பார்கள்.
புனித நீர் முழுக்கு- அப்படித்தானே!
ஆமாம்...ஆனால் தலை வாங்கியின் நடமாட்டம் தொடங்கிய பின் யாருமே இங்கே வருவதில்லை.
ஓகோ...!
இந்த இடத்தில் ஆவியின் நடமாட்டம் இருப்பதாக அவர்கள் நம்பத்தொடங்கி விட்டதுதான் காரணம்!



அவர்களுடைய அறியாமையை காட்டுகிறது இது...
?
உதவி...!
ஒரு பெண்ணின் குரல்!
அடக்கடவுளே! தலைவாங்கியின் கைவரிசையாக இருக்குமோ?
பகல் வேளையாதலால் இராது!
உதவி...!
வாருங்கள்-போகலாம்...!
? ! !
இந்தப்பக்கம்...
! ?
சீக்கிரமே உதவிகோரிய பெண் இருந்த இடத்துக்கு வந்து விட்டார்கள்.
அவள்-மிஸ் மிராண்டா...!
மற்ற குதிரைகளைவிட வில்லரின் குதிரை வேகமாக செல்லக்கூடியதாக இருந்தால் அவர் முந்திக் கொண்டு சென்று அவளை நெருங்கினார்...
என்னைப் பற்றிக்கொள்ள ஆயுத்தமாக இரு...


வில்லரின் உறுதியான கரம் அவளுடைய இடையைப் பற்றி இழுத்தது.
ஓ...கே! இனி ஆபத்து இல்லை!
ரென்னி-அந்தக் குதிரையை வளைத்து மடக்குங்கள்!
யாயாஹா...!
ஊ்ஊ...ஹ்ற!
மயங்கிவிட்டாள்-ஒரு வகையில் இதுவும் நல்லதுதான்!
இதற்கிடையே ரென்னியும் அவனது ஆட்களும் தறிகெட்டு ஓடிய குதிரையை மடக்கி விட்டார்கள்.
யாயா.. ஹா...!
ஊஊ...பாபா...!
ஹீ ஹீ ஹீ...!
சும்மா ஆர்ப்பாட்டம் பண்ணாதே-
இதன் நிறம்-
அதற்கென்ன?


கன்னங்கரேரென்று-தலை வாங்கி ஏறிவரும் குதிரை மாதிரியே இருக்கிறது!
ஹீ ஹீ ஹீ ...
ஆனால் இதன் குளம்புகள் மற்ற குதிரைகளுடையதுபோல் சாதாரணமாகத்தான் இருப்பதை கவனியுங்கள்.
சரி பாஸ்!
உண்மைதான்-ப்ராங்க்! இதை திரும்ப ஓட்டிக் கொண்டு போ.
பின்னர் ...
மயங்கி விட்டாளா?
ஆமாம்... இவளை உனக்குத் தெரியுமா?
தெரியும் - மிஸ் மிராண்டா...கழுகுக் குன்றினருகே விரிந்து கிடக்கும் நிலத்தின் சொந்தக்காரரான பரேராவின் ஒரே மகள்!
யாராவது போய் பரேராவை இங்கே அழைத்துவர வேண்டும்.
சாத்தியமில்லை...அவர் முடமாகி வீட்டோடு இருக்கிறார். ஒரு அந்நிய மாது அவரோடு இருக்கிறாள். அங்கே வேறு யாரும் கிடையாது.
முதலில் இவளை சுயவுணர்வு பெறச்செய்யுங்கள்...பின்னர் நாமே அவளுடைய வீட்டுக்கு இட்டுச் செல்வோம்!


நீரை புகட்டிய கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அவள் சுயவுணர்வு வரப் பெற்ருள். ஆனல் மிகவும் கலக்கமடைந்து போயிருந்தாள்...
நா...நான்...எங்கே இருக்கிறேன்?
உன் வீட்டிற்கு மிக அண்மையில் தானிருக்கிருய்...
உன் குதிரை தறி கெட்டு ஓடத் தொடங்கியது...உன்னுடைய அலறல் கேட்டு ஓடிவந்தோம்.
நன்றி ஸார்!
மீண்டும் உன் குதிரையில் ஏறி சவாரிசெய்ய பிரியப்படுகிருயா?
டயாக்கின் மீதா? ஊஹும்! இனி ஒருபோதும் நான் அதன்மீது ஏறப்போவ-தில்லே!
அப்படியானல் எங்களுடைய குதிரைகள் ஒன்றில் ஏறிக்கொள்..உன் வீட்டுக்கு செல்வோம்.
மிக்க நன்றி!
என் பெயர் டெக்ஸ்வில்லர்!
உயிர் உள்ளவரை நான் உங்களுக்கு நன்றிக்கடன்பட்டவளாவேன் ஸார்!
என்னலான சிறு உதவி... இதற்குப்போய்-
டயாக் என்பது வித்தியாசமான பெயராக இருக்கிறதே!
என்னுடைய தந்தை நீண்டகாலம் போர்னியோவில் வாழ்ந்தார்.


அங்கே வாழும் பழங்குடி மக்களில் ஒரு சாரரின் பெயர் டயாக்...!
ஓகே!
அழகாக இருக்கிறது- ஆனல் பணிவு இல்லே!
அதிகம் ஒட்டப்படாத குதிரை அதனல்தான் முரண்டுகிறது!
என்னுடைய தந்தை முடமானவராத லால் குதிரை ஏறுவதில்லே. நான் பெஸ்ஸி என்ற சாதுவான குதிரையில் தான் வெளிக் கிளம்புவது வழக்கம்.
அதற்கு உடல் நலமில்லே... அதனல்தான் கால்நடை மருத் துவரை அழைத்துவர டயாக் கில் ஏறி வந்தேன்.
பெஸ்ஸிக்கு என்ன நோய் என்று நான் பார்க்கிறேன்!
நீங்கள் ஒரு கால்நடை மருத்துவரா என்ன?
இல்லே... ஆனல் பெஸ்ஸிக்கு கடுமை யான பாதிப்பு இல்லேயென்ருல்!
நானே குண-மாக்கிவிட முடியும்!
அனேவரும் மிராண்டாவின் வீடு நோக்கி பயணமாயினர்.


சில நிமிட பயணத்திற்குப்பின் அவர்கள் வீட்டை சென்றடைந்தபோது வராந்தாவில் பரேராவை கண்டனர். வேற்று இனப் பெண்மணியும் உடனிருந்தாள்.
வாருங்கள் தோழர்களே...என்-மிராண்டாவுக்கு ஏதாவது தொல்லை நேரிட்டதா என்ன?
கவலைப்படும்படியாக ஏதுமில்லை அப்பா!
அவளுடைய குதிரை தறிகெட்டு ஓடியது... நாங்கள் அருகில் இருந்ததால் விபத்தை தவிர்த்துவிட முடிந்தது!
மிக்க நன்றி உங்களுக்கு!
மிஸ்டர் வில்லர் தான் என்னைக் காப்பாற்றினர் அப்பா!
தயவு செய்து எல்லோரும் உள்ளே வாருங்கள்.
இல்லை... நாங்கள் உடனே நகருக்குசென்று ஷெரீப்பை சந்திக்க வேண்டியிருக்கிறது.
ஏன்...ஏதாவது அசம்பாவிதமா?
தலைவாங்கி இன்னொரு பலி வாங்கி விட்டது மிஸ்டர் பரேரா.
அட... சைத்தானே!
அது பிசாசு-ஆவி என்று நீங்களும் நம்புகிறீர்களா?
நீங்கள் நம்பவில்லையா?
ஆவிகளுக்கு ஏது கால்தடம்?



காலடி தடங்களை பார்த்தீர்களா என்ன?
ஆமாம் வினோதமான வடிவத்திலிருந்தன,
இன்னும் பிடி ஏதும் கிடைக்க வில்லை என்றாலும் விரைவிலேயே தலைவாங்கி பற்றிய புதிரை விடுவிப்பேன்.
நீங்கள் அந்த மாயப்பிசாசு விஷயத்தில் அக்கறை காட்டுகிறீர்களா?
ஆமாம்...ஆட்டு மந்தையில் புகுந்து வெறித்தாண்டவமாடும் ஓநாயை சும்மாவிட்டுவிட முடியுமா?
ஓகோ...!
உள்ளே வரலாமே!
இதோ-
நாங்கள் கிளம்புகிறோம் வில்லா!
சந்தர்ப்பம் கிடைத்தால் ரெயின்போ பண்ணைக்கு வர மறந்து விடாதீர்கள்.
விரைவிலேயே வர முயற்சிக்கிறேன்!
தலைவாங்கியை கண்டுபிடிக்காமல் நான் இந்த எல்லையைவிட்டு போகப் போவதில்லை.
அதிர்ஷ்டம் உங்களுக்கு துணை புரியட்டும்!


மோரிஸின் சம்பவம்!
ரென்னியும் அவனது சகாக்களும் புறப்பட்டனர்...
ம்...கிளம்புங்கள்!
ஹாய்...ய்!
வாருங்கள் உள்ளே!
இப்படி வாருங்கள்!
பின்னர்-
போர்னியோவில் பலகாலம் நீங்கள் வசித்ததாகவும் இந்த கால் ஊனம் அப்போது ஏற்பட்டதாகவும் உங்கள் மகள் குறிப்பிட்டாள்,
அப்படியில்லை...
இந்த விபத்து பின்னால் தென் அமெரிக்காவில் நான் இருந்த போது ஏற்பட்டதாகும்-ஒரு முரட்டுக்காளை தந்த பரிசு இது
மிக மோசமான பரிசு!
ஆமாம்...என்னை அது ரொம்ப பயங்கரமாக காயப்படுத்தி விட்டது-
சரி...உங்களைப்பற்றி கொஞ்சம் பேசுவோம் நீங்கள் இந்தப் பகுதிக்கு புதியவரோ!
ஆமாம்...இந்த வழி சென்று கொண்டிருந்த பயணி நான்


மாயப்பிசாசை தேடிக்கண்டுபிடிக்க தீர்மானித்து விட்டீர்களாக்கும்.
ஆமாம் மிஸ்டர் பரேரா!
ஸ்ட்ரீம்லைன் ஆற்றோரப் பகுதியில் எங்கோ ஓரிடத்திலிருந்து வெளிப்பட்டு சாதுரிய மாக தன் தடங்களை பின்னர் மறைத்து விடும் புத்திசாலி அது என்பது என் கணிப்பு.
ஆவிகளைப்பற்றி உங்களுக்கு நம்பிக்கை கிடையாதா?
இல்லை...
ம்ம்... உங்களுக்கு ஒரு சிறு யோ-சனை சொல்ல ஆசைப்படுகிறேன்.
வரவேற்கிறேன் மிஸ்டர் பரேரா!
அத்தோடு, அந்த விஷ ஜந்துவோடு மோதிப் பார்க்கும் எண்ணம் வேண்டாம் உங்களுக்கு என்றாவது ஒருநாள் உங்கள் கழுத்தின் மீது இப்போது இருக்கும் அரிய பொருள் அங்கே இல்லாமல் போய்விட்ட செய்தி எனக்கு எட்டினால் மிகவும் வருத்தப்படுவேன்!
பல இடங்களில் வாழ்ந்து பயணம் செய்து, விநோதமான பல சம்பவங்களை கண்டறிந்த வயதில் மூத்த ஒரு நபர் என்ற முறையில் நான் கூறும் அறிவுரை-நீங்கள் இந்தப்பிராந்தியத்தில் தங்க நினைக்காதீர்கள் என்பதுதான்!


மேயும்பா! ட்யூன் உ ருரி நாகோ ஆராங் படான்!
ட்யான் அமோக் ட்யான் டாஞகி!
நீ அந்த மாயப் பிசாசை கொல்ல தீர்மானித்திருப் பதாக சொன்னேன்.. வீணுக செத்துப் போகப்போ கிறீர்கள் என்கிருள் இவள்.
அவளுடைய வாழ்த்துரைக்கு என் நன்றியை தெரிவியுங்கள்-ஒன்று மட்டும் நிச்சயம்...நான் அப்படி யே உயிரை விட்டாலும் அது ஒரு பிசாசின் கைகளினுல் ஏற்படாது!
மிஸ்டர் வில்லர்...என்னுடைய பெஸ்ஸியை சோதித்துப் பார்க்கிறேன் என்று சொன் னீர்களே-மறந்து போய்விட்டீர்களா?
ஆமாம்...ஆமாம்-எங்கே இருக்கிறது அது .. வா போகலாம்!
ஸாரி அப்பா...!
பரவாயில்லை டியர்!
கழுகுக்குன்றின் அடிவாரத்திலிருந்த லாயத்துக்கு சென்றனர் வில்லரும் மிராண்டாவும்
இங்கேதானிருக்கிறது...!


ஒரே நிமிடத்தில் குதிரையின் நோய் என்ன என்பதைகண்டறிந்து விட்டார் வில்லர்.
வைக்கோல் யாரிடமிருந்து வாங்குகிறீர்கள்?
மோர்லோஸிலிருக்கும் ஒரு நபரிடமிருந்து! இதை ஏன் கேட்கிறீர்கள்?
வைக்கலோடு 'யெர்பா மேலா' என்னும் விஷப்பயிரும் கலந்திருக்கிறது.
அடக்கடவுளே!
யார் அந்த வியாபாரி?
ஸாம் என்று பெயர்...
ஓ...அந்த ஸாமா-கத்தானிருக்மோ?
ஆமாம்... தலைவாங்கியை சந்தித்தும் உயிரோடு இருக்கும் ஒரே நபர்!
என்ன யோசனை?
குறிப்பிடும்படியாக ஏதுமில்லை... உடனே போய் அந்த வியாபாரியை நான் சந்திக்கவேண்டும்.
பெஸ்ஸியை ஒரிருநாட்களுக்கு பட்டினி போடு-சரியாகிவிடும். மீதமுள்ள வைக்கோலை தீயிட்டு கொளுத்திவிடு. புதிதாக வைக்கோல் வந்து சேர நான் ஏற்பாடு செய்கிறேன்...
எப்படி நன்றி சொல்வதென்றே புரியவில்லை எனக்கு!


நல்ல குதிரை ஒன்று முட்டாள் தனமாக கொலை செய்யப்படுவதை தவிர்க்க முடிந்ததே என்ற திருப்தி எனக்கு-அவ்வவுதான்!
டயாக்கும் விஷப் பயிரை சாப்பிட்டிருக்குமோ?
இருக்கலாம்... எதற்கும் நீ அதில் சவாரி செய்வதையும் தவிர்த்துவிடு.
வேலைக்கார பெண்மணி டயாக்கின் சாணத்தை கழற்றுகிறாளோ?!
டயாக்கையும் பார்க்க விரும்புகிறீர்களா?
ஆம்...வா போகலாம்.
டெக்ஸும் மிராண்டாவும் லாயத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருந்த மயும்பாவை சந்தித்தனர்.
ட்யான் அமோக்!
? !
என்ன சொல்கிறாள்? முகபாவத்தை பார்த்தால் கடுமையாக ஏதோ சொல்கிறாள் என்று தெரிகிறது.
எனக்கும் புரியவில்லை.
அவளுடைய மொழி அப்பாவுக்கு மட்டும் தான் தெரியும்.
ஓகோ!
வா... நாம் போய் குதிரையை கவனிப்போம்!


மேற்கொண்டு ஏதும் பேசிக் கொள்ளாமல் குதிரையை நெருங்கினார்கள் இருவரும்.
ஹேற! சற்று முன் ஏற்பட்ட காயம் இது...
இங்கே பச்சையாக ஏதோ...அட விஷ முள் ஒன்றின் முனையல்லவா!
குதிரைக்கு நீதான் சேணம் கட்டினாயா?
இல்லை மயும்பா கட்டினாள்-ஏன்?
இந்தப் பெண்ணுக்கு தீங்கிழைக்க மயும்பா தீர்மானித்திருப்பாளோ என்றொரு சந்தேக இழை எழுகிறது...
ஏன்...ஏதாவது கோளாறு?
குறிப்பிடும் படியாக ஏதுமில்லை...
சேணம் மிக இறுக்கமாக கட்டப்பட்டிருக்கிறது... அதனால் குதிரையின் உடம்பில் சிறு காயம் உண்டாகி இருக்கிறது.
?
போகட்டும்...நான்முன்பே சொன்ன மாதிரி இரண்டு குதிரைகளிலுமே சவாரி செய்வதை இன்னும் இரண்டு நாட்களுக்கு தவிர்த்துக்கொள்.
நகருக்கு சென்று விட்டு இன்று மதியமே புதிய வைககோல் கட்டுகளுடன் மீண்டும் நான் இங்கே வருகிறேன்


அவசியம் வாருங்கள்!
இங்கே வேறொரு முக்கிய மான வேலே இருக்கிறது எனக்கு.
மர்மமாக உலவிக்கொண்டு திரியும் பிசாசை கண்டுபிடிக்க கழுகுக் குளத்தில் ஏதேனும் தடையம் கிடைக்கக் கூடும் என்பது என்யூகம்
அந்த முயற்சியை தயவு செய்து கைவிட்டு விடுங்கள்- இந்தப்பிராந்தியத்தில் இரவில் தனியே எங்கும் செல்லாதீர்கள்,
அறிவுரைக்கு நன்றி- ஆனல் என்னேப்பற்றி நீ கவலேப்பட வேண்டியதில்லே.
தலேவாங்கி அத்தனே சுலபத்தில் என்னேப்பலிகொண்டு விடமுடியாது!
பெஸ்ஸிக்கு என்ன உடம்புக்கு என்று கண்டுபிடிக்க முடிந்ததா?
அதில் சிரமம் இருக்க வில்லே.
அதற்கு வைக்கப்பட்ட வைக்க லோடு 'யெர்பாமேலா' என் ஹும் விஷப்பயிரும் கலந்து விட்டிருக்கிறது.
விஷப்பயிரா?
இனி குதிரையின் உயிருக்கு ஆபத்து இல்லே!
இரண்டுநாள் பட்டினி போட்டால் சரியாகிவிடும்.
நல்லது!


சற்றைக்கெல்லாம் மோர்லோஸ் நோக்கிப் பயணமானார் டெக்ஸ்வில்லர்.
ம்...ஏதோ விரும்பத்தகாத ஒன்று இந்த வீட்டில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.
ஒன்று மட்டும் நிச்சயம்-விஷப்பயிர் வேண்டுமென்றே வைக்கோலோடு கலக்கப்பட்டிருக்கிறது-மிராண்டாவை டயாக்கில் பயணம் செய்ய வைக்கும் நோக்கத்தோடு! பின்னர் டயாக்கின் உடம்பில் விஷ முள் குத்தி வைக்கப்பட்டிருக்கிறது
மிராண்டாவின் உயிரோடு விளையாடும் கிராதகன் யாரென்று கண்டறியவேண்டும்- நிச்சயம்- அது அவளுடைய அப்பாவாக இராது.
அவரால் நடக்க முடியாது-மேலும், யார்தான் தன் மகளுக்கு தீங்கிழைக்க விழைவார்கள்?
மயுர்பா இந்தக் காரியத்தை செய்திருக்கலாம்...சேணம் கட்டியபோது விஷமுள்ளை அதனடியில் வைத்திருக்க வாய்ப்புண்டு.
அவளே வைக்கலோடு விஷப்பயிரையும் கலந்து விட்டிருக்கக் கூடும்!
ஒரு மணி நேர பயண முடிவில் நகரை வந்தடைந்தார் டெக்ஸ்.



அதே சமயம்-அங்கிருந்த ஒரு மதுமானக் கடையினுள்:...
ஸ்லிம்மோடு பதினொன்று- இந்த அநியாயத்தை உடனே தடுத்து நிறுத்தியாக வேண்டும்.
பிசாசை எப்படி தீர்த்துக்கட்ட முடியும்-நீயே சொல்...
பிசாசா? இல்லை...அவனும் நம்மைப் போல் இரத்தத்தாலும் சதையாலும் ஆன மனிதன்தான்!
பீதியையும் குழப்பத்தையும் உருவாக்கி இங்குள்ள நம்மை விரட்டியடிக்க யாரோ தீட்டியிருக்கும் சதிதிட்டத்தில் இந்தக் கொலையாளி ஒரு கைக்கூலியாக இருக்கக் கூடும்,
இந்த இடத்தைவிட்டுப் போகுமுன் மக்கள் தங்கள் நிலங்களை மிகச்சொற்ப விலைக்கு விற்க தயாராகிவிடுவார்கள்...கொலையாளியின் முதலாளி கொழுத்த லாபம் சம்பாதிக்க இது வகை செய்யும்.
அந்த விநோதமான காலடிகள்?
ஹே...அது ஒன்றும் பெரிய சமாச்சாரமில்லை!
ஸ்ட்ரீம் லைன் போய் ரியோ டிண்டோவில் கலக்கிறது.
அந்த இடத்தில் ஆற்றிலிருந்து வெளியேறும் எந்த நபரும் தடத்தை விட்டுச் செல்லாமல் போய்விட முடியும்.


முதற்காரியமாக நாம் இந்த பிராந்தியத்தில் உலவும் அந்நியர்களை தீவிரமாக கண்காணிக்க வேண்டும்...
இந்தாப்பா... ஜில்லென்று பீர் கொடு...!
இதோ... தருகிறேன் ஸார்!
பொறு-இந்த அந்நியனை கொஞ்சம் விசாரிப்போம்.
?
நேற்றிரவு நீ எங்கே இருந்தாய்?
நான் உனக்கு அதைச் சொல்லவேண்டிய அவசியமில்லை...
சொல்ல வைக்கிறேன் உன்னை-இதோ...இப்போது பேசு!
கொஞ்சம்கூட நேச பாவம் காட்டாத நகரம் இது...
நகரத்தைப்பற்றி பிறகு விமரிசிக்கலாம்-முதலில் என் கேள்விக்குப்பதில் சொல்.


பதில்தானே-இதோ...
டுமீல்!
ஊப்ப்...!
வேறு யாராவது துப்பாக்கியை எடுக்க நினைத்தால் என் அடுத்த இலக்கு அவர்களுடைய கையாக இருக்க வேண்டுமென்பதில்லை-
அப்போது-
இங்கே சற்றுமுன் சுட்டது யார்?
ஷெரீப்! அப்படியே நில்லுங்கள்!
ஒரு பலப் பரீட்சை!
பொறுமை...! இங்கே என்ன விபரீதம் நடக்கிறது.
விருந்தினர்களை எப்படி உபசரிக்க வேண்டும் என்று பாடம் சொல்லிக்கொடுத்துக்கொண்டிருக்கிறேன்.



நேற்றிரவு எங்கே இருந்தான் என்று கேட்டேன்...அதற்கு இப்படி ஆர்ப் பாட்டம் பண்ணுகிறான்.
ஓகோ!
பரவாயில்லை...முதலில் துப்பாக்கியை உறையில் போடுங்கள்! இது அமைதியை விரும்பும் நகரம்...அடிதடியை இங்கே நான் அனுமதிக்க முடியாது.
விசாரணையை இனி நான் நடத்திக் கொள்கிறேன் ஜார்ஜ்! மிஸ்டர்...நான் இந்தப்பகுதியின் ஷெரீப்...
இப்படி நடந்துகொண்டதற்காக வருந்துகிறேன் ஷெரீப்...
நல்லது!
ஆனால் இங்கே அப்படியொன்றும் அமைதி நிலவுவதாக தெரியவில்லை.
தலைவாங்கியின் விவகாரத்தை குறிப்பிடுகிறீர்களா!
ஆமாம் நேற்றிரவு நான் ரென்னியோடு இருந்தேன்...அப்போது-
ஒரு நிமிடம்- நீங்கள் மிஸ்டர் டெக்ஸ்வில்லரா!
உங்களைத்தான் கடந்த சில வாரங்களாக எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கிறேன்...என் பெயர் டாம் பென்னட்!
மெத்த மகிழ்ச்சி!
இவர்- மிஸ்டர் டெக்ஸ் வில்லர்! ரேஞ்சர் பிரிவின் மிக முக்கிய அதிகாரி! ஈடிணையற்ற மதி நுட்பமும் செயல்திறனும் கொண்டவர்.
போதும் புகழ்ச்சி- ஷெரீப்!
அப்படியா சேதி...



நான் ஒன்றும் இல்லாததை சொல்லவில்லையே!
பாராட்டுக்களை பின்னர் வைத்துக்கொள்ளலாம்.
வாருங்கள் தோழர்களே! தனியாக மது அருந்த எனக்குப் பிடிக்காது...
மறு பேச்சில்லை!
ஆனால் செலவு மொத்தமும் என்னுடையது...!
வாதிடப்போவதில்லை நான்!
ஆனாலும் மின்னல்வேகத்தில் துப்பாக்கியை பயன்படுத்து-கிறீர்கள்!
ஆனால் புஜபலம் என்று வந்துவிட்டால்- அது வேறு விஷயம்...
என்னை வென்றுவிட முடியும் என்ற எண்ணமோ?
ஒரு கையை மடக்கிவைத்து கட்டியவாறு உங்களை சமாளித்துவிட முடியும்!
வேண்டாம்...!
பார்த்துவிடலாம்... வா!
தயவு செய்து உங்கள் சண்டையை இங்கே வைத்துக் கொள்ளாதீர்கள்... போனதடவை உடைந்துபோன கண்ணாடிகளுக்கு பதில் புதிது வரவழைக்க இரண்டு மாதம் பிடித்தது!
வாஸ்தவம்தான்!



புரிகிறது...கண்ணாடிகள் ஏதும் உடையாது என்று உனக்கு நான் உத்தரவாதம் தருகிறேன்!
மிக்க நன்றி!
போட்டிக்கு நீங்கள் வர வில்லையா?
வருகிறேன்! ஆனால் போட்டியை வேறுவிதமாக வைத்துக் கொள்வோம்!
புரிகிறது!
அது எனக்கு மிகவும் பிடித்தமான பொழுதுபோக்கு!
சரி. நடத்திப் பார்த்து விடலாம்!
இருவரும் எதிரெதிரே உட்கார்ந்து வலது கைகளை கோர்த்துக் கொண்டனர்...
ரெடியா...!
ரெடி!
ஜார்ஜ் தன் முழு பலத்தையும் பிரயோகித்து வில்லரின் கையை கீழ் நோக்கி சரிக்க முயன்றான்... அவனுடைய முயற்சி சிறிதும் பலனளிக்கவில்லை.
அம்மாடி...என் அளவுக்கு உறுதியிருக்கிறதே!
வில்லர் - விடாதே!
விடாதே!
ஜார்ஜ்தான் வெற்றிபெறுவான்- பந்தயம் இரண்டு டாலர்!
வில்லர் மீது ஐந்து டாலர்!



அவர்களுக்கென்ன சுலபமாக சொல்லிவிடுவார்கள்- வில்லரின் கை எஃகு மாதிரியல்லவா இருக்கிறது.
வில்லரை வெல்ல முடியுமென்று தோன்றவில்லை ஜார்ஜுக்கு... தன் சக்தியனைத்தையும் ஒன்று கூட்டி இறுதிமுயற்சி ஒன்றை மேற்கொண்டான்,
சே இந்த முயற்சி வெற்றி பெறவில்லை என்றால் இவனை பிறகு வெற்றி கொள்ளவே முடியாது...
இதற்கு மேல் இவனால் ஏதும் செய்ய இயலாது!
சுற்றியிருந்தோர் பார்வை முழுவதும் ஜார்ஜின் மீதே இருந்தது...அவனுடைய நெற்றியிலிருந்த வழிந்த வியர்வை துளிகள் அவன் தன் சக்தியனைத்தையும் பிரயோகிக்கிறான் என்று சான்று கூறின...
எனக்கு தாகமாக இருக்கிறது... ஜார்ஜ்...நானொரு யோசனை கூறுகிறேன் கேட்கிறாயா?
என்ன?
இன்னும் இரண்டு மணி நேரம் ஆனாலும் நாம் இப்படியேதான் உட்கார்ந்திருப்போம் என்று தோன்றுகிறது!
என்ன சொல்கிறீர்கள்?
மது விநியோகம் முதல் சுற்று என் செலவில்- அடுத்த சுற்று உன் செலவில்...சரிதானா!
உருப்படியான யோசனை!
பந்தயம் இவ்வாறாக தீர்க்கப்பட்டு விடவே இருவரும் எழுந்தனர்... மீண்டும் அங்கே கலகலவென்று உற்சாகமான உரையாடல்கள் எழுந்தன.
அடேயப்பா...!
ஜார்ஜ் இம்மாதிரி தோற்று நாங்கள் பார்த்ததேயில்லை.
ஊஹூம்...அப்படியெல்லாம் பேசக்கூடாது!



எழுந்துவா...ஒரு கிளாஸ் ஊற்றிக்கொண்டால் சரியாகிவிடும்.
உடனடியாக எனக்குத் தேவைதான்!
வில்லர் லேசுப்பட்ட வரல்ல என்று தெரியும்..!
ஆனால் மனிதர் இரும்பினால் ஆனவர் என்று யாருமே எனக்கு சொல்லவில்லையே!
அவரை புரிந்து கொண்டாயல்லவா...சரியாக நடந்துகொள் அவரிடம்.
இதோ வந்து விட்டேன் நண்பரே!
பழகுவதற்கு இனிய நண்பன் நீ-சந்தேகமேயில்லை!
கையை கொடுங்கள் இப்படி!
நல்வாழ்த்துக்கள்...!
ஹாய்! ஹாய்...!
பின்னர்- ஷெரீப்பின் அலுவலகத்தில்...
உங்கள் சொந்தக் கருத்து என்ன?
...இது தான் இதுவரை நடந்தது. எத்தனையோ கடுத்தமான முயற்சிகளை மேற்கொண்டும் எந்தபலனும் இருக்கவில்லை.
அதாவது கொலை வெறியாட்டம் போடுவது பேய் பிசாசா...அல்லது உயிருள்ள மனிதனோ வேறு ஏதோ ஒன்றா?
எனக்கு பேய் பிசாசுகளில் நம்பிக்கை கிடையாது.


நம்பிக்கை இருந்திருந்தால் இப்படி 'ரேஞ்சர்' தலைமையகத்துக்கு உதவிகோரி எழுதியிருக்க மாட்டேன்-மாருக, பேயை விரட்ட மாந்த்ரீகனை வரவழைத்திருப்பேன்!
பரேராவைப்பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?
பாவம்...கால்கள் சுவாதீனமிழந்து போனதால் நடமாட்டமின்றி நாற்காலியே கதி என்றிருக்கிறார்...
...அவருடைய மகளையோ... பணிப்பெண்ணையோ சந்தேகிக்க இடமில்லை
அந்தக் கத்தியை கையாள நிறைய உடல் வலிமை தேவை
கொலையுண்ட பிரேதங்களை நான் பார்வையிட்டபோது ஒரே வெட்டில் கழுத்து துண்டிக்கப்பட்ட உண்மையை தெளிவாக விளங்கிக்கொள்ள முடிந்தது.
அசாத்தியமான உடல் வலிமையுடையவர்களுக்கு மட்டுமே அது சாத்தியம்!
நகரில் இருக்கும் யாரோ ஒரு நபர் கொலையாளியை நேரில் பார்த்திருப்பதாக ரென்னி சொன்னார்.
ஆமாம்... வைக்கோல் வியாபாரி ஸார்தான் அந்த நபர்!
ஸாம் கூறிய விபரங்களின் படி பார்த்தால் பரேராவை சந்தேகிக்க துளியும் காரணம் கிடையாது!


ஏனெனில் கொலையாளி ராட்சஸ தோற்றமுடைய ஒரு வாலில்லா குரங்கு என்பது ஸாமின் கூற்று.
கொலையாளியை பார்த்தபோதுஸாம் மது மயக்கத்தில் குழம்பிப்போய் இருந்திருக்கலாம்!
வாய்ப்பில்லை.
நான் சந்தித்தபோது மிக தெளிவான புத்தியுடன் தான் இருந்தான்.
பிறகு நிறைய ஊற்றிக்கொண்டான் என்பது வேறு விஷயம்!
நல்லது ஷெரீப்
ஸாமை சந்தித்து நானே மற்ற விபரங்களை சேகரித்துக் கொள்கிறேன்.
அவ்வப்போது எனக்கு தகவல் தெரிவியுங்கள்!
அவசியம் தெரிவிக்கிறேன்!
கால்மணி நேரம் கழித்து-
உனக்கு யார் சொன்னது?
டெக்ஸ்வில்லர்? நீங்கள் நகருக்கு வந்திருக்கும் விஷயத்தை கேள்விப்பட்ட உடனேயே அவசியம் என்னை சந்திக்க வருவீர்கள் என்று எதிர்பார்த்தேன்
யாரா? குறைந்தது பத்துப்பேராவது சொல்லியிருப்பார்கள்.
பிசாசை நான் சந்தித்த விபரங்களை கேட்டறியத்தானே இங்கே வந்திருக்கிறீர்கள்?
ஆமாம்!



உன் வாடிக்கையாளர்களுக்கு விநியோகம் செய்யும் வைக் கோலை நன்றாக சோதித்துவிட் டுத்தானே கொடுக்கிறாய்
ஆமாம்-ஏன்?
ப்ரேராவுக்கு நீ விற்ற வைக் கோலில் யெர்பாமேலா' கலந்திருக்கிறது
அப்படியொரு விஷப்பயிரை கலந்து விற்குமளவுக்கு நான் ஒரு பைத்தியக்காரன் என்று நினைக்கிறீர்களா?
கோபப்படாதே ஸாம்... நான் அப்படி சொல்லவரவில்லை!
சும்மா தெரிந்து கொள்ளத்தான் கேட்டேன்.
நான் விற்கும் வைக்கோல் கலப்படமற்றது...
அதோ அந்த போரில் இருந்து தான் எடுத்துக்கொண்டு போனேன்! வேண்டுமானால் நீங் களே சோதித்துக் கொள்ளலாம்.
அவசியமில்லை ஸாம்...
உன்னை நம்புகிறேன்... விஷயத்தை இத்தோடு மறந்துவிடு! வேறொரு சந்தேகம் உறுதியாகிறது.
?
சரி இனிநாம் தலை வாங்கியைப்பற்றி பேச லாம்-நீ அவனை நேருக்கு நேர் பார்த்தாயா?
ஆமாம்-உங்களை நான் இப்போது பார்ப்பது போல!
அல்மைராவிலிருந்து கோச்சுவண்டியில் நான் திரும்பிவந்து கொண்டி ருந்தபோது பாய்ந்தோடி வரும் குதிரையின் குளம் பொலி பின்னால் கேட்டது



திரும்பிப்பார்த்தேன்-கருப்புக்குதிரை யொன்றில் ராட்சஸ தோற்ற முடைய வாலில்லா குரங்கு ஒன்று முரட்டு கத்தியை தலைக்கு மேலே சுழற்றியவாறு என்னை நோக்கி வந்துகொண்டிருந்தது
ஒருவேளை கனவுதான் கண்டுகொண்டிருக்கிறேமோ என்ற சந்தேகம் ஏற்பட்டது எனக்கு-சட்டென்று அந்த சைத்தான் படுபயங்கரமாக உறுமியது அவ்வளவுதான்-குதிரைகளை நாற்கால் பாய்ச்சலில் விரட்டிக்கொண்டு காற்ருய் பறந்து வந்து விட்டேன்.
க்க்ர்ர்ர்...ஆஆஹீஹீஈஈ...ஈ!
என் முதுகுதண்டு ஜில்லிட்டுப் போனது...அத்தனை வேகமாக, உருக்கமாக என் வாழ்நாளில் எப்போதும் பிரார்த்தனை செய்தது கிடையாது!
என்னுடைய கோச்சுவண்டி மட்டும் அப்போது காலியாக இருந்திராவிடில இத்தனை வேகமாக வந்திருக்க முடியாது...
இந்நேரம் நான் தலையில்லா முண்டமாக சவக்குழிக்குள் புதையுண்டு கிடப்பேன்!
அதிர்ஷ்டவசமாக நான் நகருக்கு மிக அண்மையில் இருந்தேன் இருநூறு டாலர் பண நஷ்டத்தோடு விஷயம் முடிந்து விட்டது.
அதென்ன இரு நூறு டாலர் விவகாரம்?
ஜட்ஜின் வீட்டு முகப்பில் போய் மோதிக்கொண்டு விட்டேன். இடிந்த சுவரை சரி செய்து கொடுக்க ஆனசெலவு - இருநூறு டாலர்!
அந்த கொலைகாரனை பார்த்த போது தெளிவான புத்தியோடு தான் இருந்தாயா?
ஆமாம... நூற்றுக்கு நூறு


சராசரி மனிதனைவிட இரண்டு பங்கு கொழுத்துப் போயிருந்தது அந்தப் பிசாசு...
அப்படியா!
நன்றி ஸாம்...
அந்தப்பிசாசை தேடிக் கண்டுபிடிக்கப் போகிறீர்களா என்ன?
அப்படித்தான்!
அடடா.. மறந்தேபோய்விட்டேன் பார்த்தாயா! உடனடியாக நீ பரேராவுக்கு வைக்கோல் அனுப்பி வைக்க வேண்டுமே!
அனுப்பி விடுகிறேன் ஸார்!
ஒன்று செய்வோமே! மதிய உணவுக்குப் பின் நான் இங்கே வருகிறேன்... இருவரும் சேர்ந்தே போய்விடலாம்!
நல்ல யோசனைதான்!
பிற்பகலில் ஸாமும் வில்லரும் பரேராவின் இருப்பிடத்துக்குச் சென்றனர். ஸாம் நகருக்கு திரும்பி விட்டான். வில்லர் மட்டும் பின்தங்கிவிட்டார்
நீங்கள் ஏன் இரவு எங்களுடனே தங்கிவிட்டு காலையில் செல்லக்கூடாது?
விருந்தினர் அறை தயாராக உள்ளது!
நன்றி மிராண்டா! உனக்கு ஏகப்பட்ட சிரமம் கொடுத்துவிட்டேன்!
இந்தக்காரிருளில் நீங்கள் தனியே பயணம் செய்வது ஆபத்து!
தலைவாங்கி என் தலையை வெட்டிவிடுவான் என்று அஞ்சுகிறாயா?
ஆமாம் என்பதாக தலையை அசைத்த மிராண்டா வாயைத்திறந்து ஏதும் சொல்லவில்லை.
வீணாக அலட்டிக் கொள்ளாதே!



அதே சமயம் புரா தன சிலைகள் சிதில மடைந்து கிடந்த குகையினுள் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த ஒரு முரட்டு வாளை நோக்கிச் சென்று கொண்டிருந்தது ராட்சஸ உருவம் ஒன்று...
ஆஆஹா! அசரீரி கேட்கிறது...பழிவாங்கும் படலத்தின் அடுத்த அத்தியாயம் எழுதப்பட வேண்டிய தருணம் வந்துவிட்டது!
சோலைத் தேடி...
தலைவாங்கியைப்பற்றி பயந்து கொண்டிராமல் நிம்மதியாகத் தூங்கு!
அது வீட்டினுள் நுழைந்து அட்டகாசம் செய்வதில்லை...எனவே நான் பயப்பட அவசியமே கிடையாது!
நேற்றுவரை அப்படி நடக்கவில்லை என்றாலும் இன்று நடக்காது என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்க முடியும்?
அப்படி ஒருபோதும் நடக்காது!
இத்தனை உறுதியாக நீ சொல்லக்காரணம்?
விளக்கிச் சொல்லத் தெரியவில்லை
நல்லது!


அப்படியானால் நீ உள்ளே போ...அதன் மூலம் பாது காப்பை உறுதி செய்துகொள்!
குட்நைட்! மோர்லோஸ் நோக்கி நேராக விரைந்து செல்லுங்கள் என்ன...!
குட்...பை!
சரி...அப்படியே செய்கிறேன்!
ஆண்டவன் உங்களை காப்பாற்றுவாராக
புயல் தோற்றுப் போக வேண்டும்...!
பணிப்பெண்ணிடம் சற்று எச்சரிக்கையாக இரு என்று மிராண்டாவை நான் எச்சரித்திருக்க வேண்டும்!
வைக்கோலில் விஷப்பயிரை கலந்தவள் மேயும்பாவாகத்தானிருக்கும்,
கருப்புக் குதிரையின் சேணத் திண்டியில் விஷ முள்ளை வைத்தவளும் அவளாகத்தானிருக்கும்
அவளை சந்தேகிக்கிறேன் என்கிற விஷயத்தை அவள் உணர்ந்தே தானிருக்கிறாள்.
உணவு வேளையில் அவள் என்னைப்பார்த்த பார்வையில் கொலைவெறி மிளிர்ந்தது!


பின்னர் பரேராவை படுக்கைக்கு கொண்டு சென்ற போதும் கூட அவன் பார்த்த பார்வையில் ஒருகணம் என் ரோமங்கள் குத்திட்டு நின்றன...
கொலையாளி அவளாக இருக்கலாமோ? ஊஹூம் அப்படியிருக்க கொஞ்சம் கூட சாத்தியமில்லை!
தேவையான உடல் உறுதி அவளிடம் கிடையாது!
ஹே! குதிரை ஒன்று வேகமாக என்னை விரட்டிக்கொண்டு வரும் ஓசை கேட்கிறதே!
அந்த சைத்தானாக இருக்குமோ?
யாரது?
ஆவ்...அவனேதான்!
ஆஹாஈஈ!



ஓடு டைனமைட்...!
கொலையாளி பிசாசு அல்ல என்பது உறுதியாகிவிட்டது குரலைக்கேட்டால் ஏதோ அடிபட்ட ஓநாயின் ஓலம் போல் இருக்கிறது.
ஆஹூஹீஈயா!
வேகமாக என்னை நெருங்கிக் கொண்டிருக்கிறான்... உடனே நான் புத்திசாலித்தனமாக ஏதாவது செய்தாகவேண்டும்!
நகரை நோக்கி தொடர்ந்து ஓடிக்கொண்டேயிரு டைனமட்!
செடிகொடிகள் புதராக இருந்த ஓரிடத்தை சமீபித்ததும் சட்டென்று கீழே பாய்ந்தார் டெக்ஸ்...
மங்கலான இந்த வெளிச்சத்தில் அவன் என்னைப் பார்க்க முடியாது
அப்படியே தரையில் உயரமான கள்ளிச் செடி ஒன்றின் பின்னால் பதுங்கிக் கொண்டார் டெக்ஸ். அரை நிமிட இடைவெளிகுப் பின்...
ஆஆஹீ ஹீஈஈயாயா


ஸாம் குறிப்பிட்டது போல் கொலையாளி ஒரு மனிதக் குரங்குதான் போலிருக்கிறது!
'போலா' வை கையாள தெரிந்திருப்பதுதான் விந்தையான சமாசாரம்!
ஓட்டுநர் இல்லாத குதிரையை விரட்டிக் கொண்டு போகிறோம் என்று இன்னமும் அது தெரிந்துகொள்ளவில்லை!
அந்த மையை அது தெரிந்து கொண்டுவிடுமுன் நான் இங்கிருந்து அகன்றிட வேண்டும்!
அது மீண்டும் தன் மறைவிடத்துக்கு விரைவிலேயே திரும்பி வரக்கூடும். எனவே நான் முன்னதாகவேபோய் ஸ்ட்ரீம்லைன் ஆற்றோரம் ஒளிந்து காத்திருப்பதுதான் சரி.
அது எப்படி மாயமாக மறைந்து போகிறது என்றறிய ஒரு வாய்ப்பு கிட்டக்கூடும்.
இதற்கிடையே. தலைவாங்கி தனக்கு முன்னால் சென்று கொண்டிருந்த குதிரையை விரட்டிப் பிடிக்கும் முயற்சியை தொடர்ந்து சொண்டிருந்தது.
யாயா-ஆ...ஹாஆஆ...ஈஈ! ம்...இன்னும் வேகமாகப்போ சனியனே!


ஆஆயா...ஈஈஈ...
ஹீ ஹீஈஈ...!
டைனமைட் நாற்கால் பாய்ச்சலில் ஓடிக் கொண்டே யிருந்தது... அரைமணி நேரத்திற்குப் பின் அது மார்லோஸை நெருங்கி விட்டது!
அதையடுத்து-
ஹீஈஈ...!
?
?
?
ஆமாம்... அவருடையதுதான்!
அது-வில்லரின் குதிரையல்லவா!
தடுத்து நிறுத்துங்கள்!
ஒருவன் ஓடிச் சென்று டைனமைட்டின் கடிவாளத்தைப்பற்றி இழுத்து அதை நிறுத்தியபோது இரத்தத்தை உறையவைக்கும் ஆங்கார ஓலம் ஒன்று அங்கே எதிரொலித்தது.
ஆஆயாஈஈ...!
தலைவாங்கி...!
ஆமாம்...அதனுடைய ஓலம்தான்!
அந்த சைத்தான் வில்லரை கொன்று விட்டது போலும்!
?



இங்கே என்ன கலாட்டா?
இது வில்லரின் குதிரை?
ஷெரீப்-நீங்கள் கேட்கவில்லையா அந்த சைத்தானின் ஓலத்தை?
அதாவது வில்லர் கொல்லப்பட்டிருக்கக்கூடும் என்கிறாயா?
இன்னும் இங்கே சும்மா நின்றுகொண்டிருப்பதில் அர்த்தமில்லை.
பிசாசை விரட்டிக்கொண்டிருப்பதிலும் அர்த்தமில்லை.
வில்லரைக் காணோம்!
பேய் தன்னை விரட்டிக்கொண்டு வருவதுபோல் மிரண்டு, ஓடி வந்திருக்கிறது!
இன்னமும் கொலையாளி ஒரு பிசாசு என்று சொல்லிக் கொண்டிருப்பது விவேகமான பேச்சு அல்ல...
ஜார்ஜ் கூறுவது சரியே! வாருங்கள் துரத்திக்கொண்டு போவோம்!
ஆனால் கும்மிருட்டாக இருக்கிறதே!
தீவட்டியை பிடித்துக்கொண்டு போகலாம்!
தாமதம் கூடாது!


நகருக்கு வெளியே இரை’ தப்பி விட்ட ஆங்காரத்தில் கோபாவேசமாக உறுமிக் கொண்டிருந்தது தலைவாங்கி.
ஆ ஆ யா யா ஹீ ஹீ ஈ...!
நகருக்குள்ளே படைஒன்று உருவாகியது...
ம்... கிளம்புங்கள்! சீக்கிரம்!
அதைத் தொடர்ந்து-
பின்தொடர்ந்து ஒரே கூட்டமாக வாருங்கள்!
விரைந்து வாருங்கள்!
விடக்கூடாது!
தீ...! தீ...!
பீதியின் ஆளுகையிலிருக்கும் இந்தக் கும்மிருட்டினூடே வெளிச்சத்தின் ஊடுருவலா...சே!


நெருங்கி வந்த நெருப்புப் பந்தங்களைக்கண்டு மிரட்சியடைந்த தலை-வாங்கி தன் குதிரையை திருப்பி வேகமாக அங்கிருந்து அகன்றது.
ஆ ஆஆ!
அதோ ஓடுகிறது! வாருங்கள்-சுட தயாராக இருக்கவும்!
விடாதே...!
நமக்கு சுமார் 50 மீட்டர் தூரத்தில்தான் கொலையாளி போய்க்கொண்டிருக்கிறான்!
துப்பாக்கியைப் பயன்படுத்திப் பார்க்கலாம்தான்!
ஜார்ஜ் தன் கையிலிருந்த தீவட்டியை கீழே போட்டுவிட்டு நாலைந்து முறை சுட்டான்...
டுமீல்! டுமீல்!
ஆ ஆயாயாஹீ ஹீ ஈஈஈ!
குண்டு தாக்கியிருக்குமோ?
இருக்கலாம்... கொஞ்சம் நில்லுங்கள்!
கொன்று விட்டாயா?


அமைதி...அமைதி! அவன் இன்னமும் சவாரி செய்துகொண்டிருக்கிறானா இல்லையா என்று கேட்டறியவேண்டும்!
குளம்பொலி கேட்கிறது!
டக்...
டக்...
டக்...
டக்...
டக்...
குதிரை தொடர்ந்து ஓடிக்கொண்டிருக் கிறது...ஆனாலும் அந்த சைத்தான் அடிபட்டு கீழே விழுந்திருக்கவும் வாய்ப்புண்டு.
அரைவட்டமாக விலகி முன்னேறுங்கள்!
அதே சமயம்—அங்கே ஆற்றங்கரையில்...
துப்பாக்கிகளின் முழக்கம்!
பெரும் போர் நடக்கிறதா என்ன?
பேய் பிசாசுக்கு அஞ்சாத நபர்களோடு தலைவாங்கி பொருதிக்கொண்டு விட் டிருக்க வேண்டும்.



அவர்கள் அந்த மிருகத்தை தீர்த்துக் கட்டி விடக்கூடும்...அப்படியே அது தப்பியோடி வந்தாலும் இங்கே என் கையில் உயிரை விடப்போவது உறுதி!
தனக்கு இப்படியொரு வரவேற்பு இங்கே காத்துக்கொண்டிருப்பது அதற்கு தெரிந்திருக்க நியாயமில்லை...
அவர் நின்றுகொண்டிருந்த இடம் ஒரு வழுக்குப் பாறை ஆதலால் பாதையில் முழுக் கவனம் செலுத்தி நின்ற வில்லர் சற்றும் எதிர்பாராத வகையில் சரிந்து நீரினுள் விழுந்துவிட்டார்.
ஆவ்...!
தொபுக்!
அதே வினாடியில் ஆற்றை நோக்கி அசுர வேகத்தில் வந்து சேர்ந்தது தலைவாங்கி.
அந்த மிருகம்தான்! வகையாக மாட்டிக்கொண்டு விட்டேன்.


மரண இரவு!
சட்டென்று குறிவைத்து தன் கைத்துப்பாக்கியை இயக்கினார் வில்லர்.
களிக்! களிக்!!
உற்சாக முழக்கம் ஒன்றை அடித் தொண்டையிலிருந்து எழுப்பியவாறு வில்லரைக் குறிவைத்து குதிரையை விரட்டிக்கொண்டு வந்தது அந்த மிருகம்!
ஈ.ஈ.ஈ...!
ஆனால் அவர் சரிந்து விழுந்தபோது நனைந்து போனதால் துப்பாக்கிவெடிக்க மறுத்தது...செய்வதறியாது ஒரு கணம் திகைத்து தடுமாறினார் வில்லர்.
க்ளிக்! க்ளிக்!
ஒரு மனிதன் ஆகா! மாயக்குரலை திருப்திப்படுத்த பலிஒன்று கிடைத்தது!
கையிலிருந்த துப்பாக்கியை எதிரியை குறிவைத்து எறிவதைத் தவிர வேறு ஏதும் செய்ய முடியவில்லை வில்லரால்!
ஆஆஹாஹீஹீ!
இப்போதைக்கு இங்கிருந்து தப்பியோடி விடுவது தான் புத்திசாலித்தனம்!


தொபுக்!
சட்டென்று நீரினுள் அமிழ்ந்து அதே நிலை யில் வேமாக நீந்தலானர்
ஆற்றின் மையப் பகுதிக்கு வந்த பின் நீந்துவதை நிறுத்தி நீரோட் டம் தன்னை இழுத்துச் செல்லச் செய்தார் வில்லர்.
அந்த மிருகம் என்னைக் கண்டு பிடிக்காமலிருக்க வேண்டும்!
இதற்கிடையே துப்பாக்கி வந்து தாக் கியதால் ஒருகணம் தடுமாறிவிட்ட அந்த சைத்தான் சட்டென்று சமாளித்துக கொண்டு முன்னேறியது.
நீரினுள் இறங்கி வில்லர் முன்பு நின்றி ருந்த இடத்துக்கு வந்ததும் கத்தியை நாற்புறமும் ஓங்கி வீசுயது
யாயாஹீ...!
ஆனல் அப்போது...
அதோ...நேர் எதிரே-
நீரினுள்...
சுட்டுத் தள்ளுங்கள்...!
இம்முறை தப்பமுடியாது அவனல்...! விடாதீர்கள்!
?


ஓஓஹாஹீஈஈ...!
நெஞ்சே வெடித்துவிடும் போலிக்கிறது!
அவர் நீர்மட்டத்துக்கு எழும்பி வந்த போது ஷெரீப்பும் மற்றவர்களும் வந்து கொண்டிருப்பதைக் கண்டார்...
அம்மாடி... பிழைத்தேன்!
அங்கே கவனி!
சுடு
அகப்பட்டுக்கொண்டு விட்டான்!
பொறுங்கள்-அங்கிருக்கும் நபர் நம்மைப்போல் ஒரு சாதாரண ஆசாமி!
அவர்கள் என்னை குறிவைத்து சுடுகிறார்களே!
டுமீல்!
இல்லை...அவசரப் படாதீர்கள்!
டுமீல்!
சுடாதீர்கள்... சுடாதீர்கள்!
அடக்கடவுளே-அது வில்லரல்லவா!
?
சுடுவதை நிறுத்துங்கள்!



என்னை சுட வேண்டிய அவசியம் என்ன வந்தது-விளங்க வில்லையே!
இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்... தலைவெட்டப்பட்டு முண்டமாக எங்கோ கிடக்கிறீர்கள் என்றல்லவா நாங்கள் நம்பிக்கொண்டிருக்கிறோம்!
அலைச்சல் ரொம்ப அதிகமல்லவா...அதனால் ஜாலியாக அலுப்பு தீர குளித்துக் கொண்டிருக்கிறேன்!
தலைவாங்கியை நீங்கள் தேடி வந்திருந்தால் ஆற்றைக்கடந்து மறு கரைக்கு சென்று முயற்சியை தொடருங்கள்!
அந்த சைத்தான் சற்று முன்னர் இங்கே தானிருந்தது ...
அது கழுகுக் குளத்தை நோக்கித்தான் சென்றிருக்க வேண்டும்.
வாருங்கள் போகலாம்!
கேட்டீர்களல்லவா!
வில்லரின் ஆலோசனைப் படி ஜார்ஜை தவிர மற்றவர்கள் இரண்டு குழுவாக பிரிந்து சென்றார்கள்.
ஒரு வேளை அந்த பிசாசு இங்கே வரக்கூடும்
ஊஹூம் .. வாய்ப்பில்லை.
மேலும் அதுபேயோ பிசாசோ அல்ல!
?


அப்படியா?
ஆமாம்...ஸாம் குறிப்பிட்டதுபோல் ராட்சஸ தோற்றம்கொண்ட ஒரு வாலில்லா குரங்கு அது!
வா போய் நாமும் மற்றவர்களோடு சேர்ந்து கொள்வோம்-அந்த சைத்தானை கொல்வதில் நானும் நேரடி பங்கு கொள்ள ஆசைப்படுகிறேன்.
என் குதிரையிலேயே நீங்கள் ஏறிக்கொண்டு விடலாம்-வாருங்கள்!
இதற்கிடையே மற்றவர்கள் கழுகுக்குளத்தை சென்றடைந்து விட்டிருந்தனர்
இன்னும் வெளியே வரக்காணோம்!
எல்லோரும் குளத்தைச் சுற்றி வட்டமாக நின்று விழிப்புடன் இருங்கள்! அது எந்தக்கணமும் வெளியேறி வரக்கூடும்.
சில நிமிடங்களுக்குப் பின்-
எந்த அறிகுறியும் தென்படவில்லையே!
இந்தப் பக்கமும்தான்!
மாயமாக பறந்தோடிப் போயிருக்க முடியாதே!
ஏன் முடியாது... எந்த விசித்திரமும் நிகழலாம்!


ஜார்ஜும் வில்லரும் வந்து மற்றவர்களோடு சேர்ந்து கொண்டனர்.
பார்த்தீர்களா? அந்த மிருகத்தின் காலடித் தடம் ஒன்று கூட இங்கே தென்படவில்லை!
அப்படியா?
ஆமாம்! நம் ஆட்கள் அங்குலம் அங்குலமாக எல்லா இடமும் தேடிப் பார்த்து விட்டார்கள்.
ஒரு தீவட்டியை இப்படி கொடுங்கள்!
கையில் தீப்பந்தத்தை பிடித்தவாறு தரையை கூர்ந்து ஆராய்ந்தார் வில்லர்.
அது இங்கே எங்காவது ஓரிடத்தில் வெளியேறித் தானே ஆகவேண்டும்!
ஷெரீப்பின் கூற்று சரி என்று தீர்மானமாக புரிந்தது.
இல்லை...அது எப்படி மாயமாக மறைந்தது என்பதுதான் புதிராக குழப்புகிறது.
ஏதாவது அகப்பட்டடதா?
என்ன . நாம் நகரை நோக்கி திரும்பலாமா?
நாம் இங்கே விடியும்வரை காத்திருப்போம்...அந்த மிருகம் இங்கே ஏதாவது ஒரு பாறையின் பின்னே ஒளிந்து கொண்டிருக்கக் கூடும்!


அப்படி இருக்குமேயானுல் விடிந் ததும் அதன் கதை முடிந்து விடும்!
அப்படித்தான்! ஆனுல் அதுவரை நாம் விழிப் போடு, ஒரே கூட்ட மாக இருக்கவேண்டும்!
நான் என்ன நினைக்கிறேன் என்ருல்...
என்ன?
அந்த மிருகம் குன்றின் மீது ஏறி போய் விட்டிருக்கலாம்
இருக்கலாம்!
குதிரையை நீரோட்டத்தோடு போகவிட்டுவிட்டு அது மட்டும் குன்றின் மேலேறி சென்றிருக்கக்கூடும்.
ராட்சஸ குரங்குக்கு குன்றின் மேலே ஏறுவது அப்படியொன்றும் பெரிய காரியமல்லதான்...ஐயோ-அங்கே பரேராவின் வீடு இருக்கிறதே!
தொலைந்தது! அது அங்கே போயிருந்தால் அவர்கள் கதை இந்நேரம் முடிந்து விட்டிருக்கும்!
சீக்கிரம்...ஒரு குதிரையையும் ஒரு ரைபிளேயும் கொடுங்கள் என்னிடம்- நான் உடனடியாக அங்கே போயாகவேண்டும்.
தனியாகவா...? கூடாது!
ஒரிரு நபர்களை உடனழைத்துச் செல் கிறேன்...மற்றவர்கள் இந்த இடத்தை கண்காணித்துக் கொண்டிருக்கட்டும்!
நான் வருகிறேன்!
நானும்!



வாருங்கள் செல்வோம்! விபரீதம் நிகழு முன் அங்கே நாம் போய்ச் சேரவேண் டுமென்று பிராத்தனை செய்து கொள்ளுங்கள்!
இதற்கிடையே...
ஆஹாஹீ... அசரீரியின் ஆணையை நிறைவேற்றமுடியவில்லையே!
ஆஆ யீயீ...ஈஈ!
ஏ...மாயக்குரலே முரசு அடித்து சாவு முழக்கத்தை எழுப்பத்தவறிவிட் டேன்-என்னை மன்னிப்பாயாக!
முட்டாளே...ஏன் இளிக்கிறாய்!
மாயக்குரலின் தூதனைப் பார்த்துச் சிரிக்கத் துணிந்த உன்னை



அதே சமயம்...அங்கே—
அதோ இருக்கிறது பரேரா வின் வீடு...ஏதும் விபரீதம் நிகழ்ந்துவிட்டிருப்பதாக தெரியவில்லை.
ஒருவேளை அந்த சைத்தான் இங்கே வந்திருக்காது!
அல்லது ஏற்கனவே வந்து வீட்டிலுள்ள மூவரையும் பிணமாக்கிச் சென்றிருந்தாலும் இப்படித் தான் அமைதியாக கிடக்கும்!
அந்த சைத்தான் எதிர்ப்பட்டால் நீங்கள் எத்தனை விரைவாக துப்பாக்கியின் விசையை இழுக்கிறீர்கள் என்பதை பொறுத்துத் தான் இருக்கிறது நாம் சாவதும் பிழைப்பதும்!
நால்வரும் வீட்டை நெருங்கினார்கள்...
ஹே...உள்ளே யார்?
ஜார்ஜின் குரலுக்கு மறுமொழி ஏதும் வரவில்லை...ஒரு நிமிட இடைவெளிக் குப் பின்—
டும்!
யாருமே யில்லையோ?
இதற்காவது பதில் வருகிறதா பார்ப்போம்!


யார்...உள்ளே இருக்கிறது?
நம் குரலே உள்ளேயிருப்பவர்கள் நிச்சயம் கேட்டிருக்க வேண்டும்.
வாருங்கள் உள்ளே செல்வோம்!
கடைசியில் உன்னுடைய யூகம் சரியானதோ என்று தோன்றுகிறது ஜார்ஜ்!
எனக்கும் அதே பயம்தான்!
டுமீல்!
டமார்!!
உள்ளே யாரையும் காணோமே! அந்த விளக்கை ஏற்று!
வீட்டை விட்டு எல்லோரும் வெளியேறிச் சென்றுவிட்டதுபோல் தோன்றுகிறது!



அந்தப் பிசாசு மட்டும் இங்கே தங்கியிருக்கலாம்.
வாருங்கள் நிலவறைக்குச் சென்று பார்க்கலாம்! பயப்படதேவையேயில்லை...எதிரி பேயோ பிசாசோ அல்ல-பெரிய குரங்கு-அவ்வளவுதான்!
அவர்கள் சமையலறையை நோக்கி நடந்தபோது யாரோ நடந்து வரும் காலடியோசை கேட்டது
யாரோ வருகிறார்கள்?
உஷார்! இம்முறை தப்பவிட்டுவிடக்கூடாது!
மர்மக் குரங்கு!
துப்பாக்கியை தயாராக ஏந்தியவாறு காலடியோசை கேட்ட திசையில் மெள்ள அடி எடுத்து வைத்து முன்னேறினார்கள்,
குரங்கு எதிர்ப்பட்டால் சற்றும் தயங்காமல் சுட்டு விடுங்கள்!



ஆனால் அவர்கள் கண்டது-
ட்யான் அமோக்!
பணிப்பெண்!
கெட்டது போ!
அவள் கையிலிருப்பதை கவனித்தீர்களா!
கஷ்டகாலம்...! நாம் எவ்வித கெட்ட நோக்கத்தோடும் இங்கே வரவில்லை என்று இவளுக்கு எப்படி விளங்க வைப்பது என்று புரியவில்லையே!
முன்னால் ஓரடி எடுத்து வைத்தாலும் கத்தியை நம் நெஞ்சில் பாய்ச்சிவிடத் தயங்கமாட்டாள் என்று தோன்றுகிறது.
துப்பாக்கியை தாழபிடியுங்கள்.
ட்யான் அமோக்... மயும்பா கில்!
எங்களை புரிந்து கொள்ள முயற்சி செய் மயும்பா! மிராண்டாவும் அவளுடைய தந்தையும் பத்திரமாக இருக்கிறார்களா என்று உறுதி செய்து கொள்ளவே வந்தோம்.
நேரம்தான் வீணாகிறது-இவள் புரிந்து கொள்வாள் என்று தோன்றவில்லை
இவள் கிடக்கிறாள்...நாம் வந்த வேலையை கவனிக்கலாம் முதலில் இந்த அறையினுள் செல்வோம்.



வில்லர் கதவை நெருங்கி கைப் பிடியில் கையை வைத்ததும்...
ஸார்...?
?
ஆ...வ்!
தட்!
சும்மாவிடக் கூடாது!
பிடியுங்கள் அவளை!
அவளை பிடித்துக் கொள்ளுங்கள்!
அம்மாடி...என்ன துள்ளல்...!
யாஆஆ...!
அப்பப்பா.. என்ன வேகத்தில் வீசி-னாள்-குறிவைப்பதிலும் கைதேர்ந்த வளாக இருப்பாள் போலிருக்கிறது!
சும்மா இரு!
அடடா...!
இனி இவள் திமிற முடியாது...
யாயாஹாஹீ...
அப்படியே பிடித்துக்கொண்டிரு கயிறை தேடி எடுத்து வருகிறேன்...கட்டிப் போட்டு விடலாம்!
இதற்கிடையே ஒரு விளக்கோடு உள்ளே நுழைந்தார் வில்லர்.
இத்தனை களேபரத்தினூடேயும் இவள் எப்படி நிம்மதியாகத் தூங்க முடிகிறது?


மிஸ் மிராண்டா... மிராண்டா...
பிரயோஜன மில்லை!...நான் சொல்வது எதுவுமே இவள் காதில் விழவில்லையே...
நல்லவேளை-உயிர் இருக்கிறது ஆனால் ஏதோ மயக்கத்தில் ஆழ்ந்து போயிருப்பவள் போலல்லவா தோன்றுகிறது.
அப்படித்தானிருக்கும்! சரி...இனி போய் பரேரா எப்படி இருக்கிறார் என்று பார்க்கலாம்!
இப்போது இல்லை-ஆனால் ரொம்பவும் சிரமப்படுத்திவிட்டாள்,
என்ன பிரச்னை ஏதுமில்லையே!
அறையினுள் யாருமே இல்லையா?
மிராண்டா இருக்கிறாள்...ஆனால் ஒரு சின்னஞ்சிறு குழந்தைபோல் நித்திரையிலாழ்ந்து போயிருக்கிறாள்.
சரியான தூங்கு மூஞ்சி போலிருக்கிறது!
அப்படியில்லை! மயக்க நிலையில் இருப்பதாக தோன்றுகிறது. மிஸ்டர் பரேராவும் அதே நிலையில்தான் இருப்பார் என்பது என் யூகம்.


அடுத்த அறையினுள் சென்று பார்த்தபோது—
இதற்கெல்லாம் என்ன அர்த்தம்?
நான் எதிர்பார்த்ததுதான்!
இதுதான் என்று தீர்மானமாக இப்போது ஏதும் சொல்ல முடியா விட்டாலும் இப்படித்தானிருக்கும் என்று ஓரளவு யூகிக்க முடிகிறது.
இன்னமும் அவருடைய தலை கழுத்தின்மேல் இருக்கிறது. என்ற வரைக்கும் அதிர்ஷ்டம் செய்தவர்தான்!
வீடு முழுவதும் அலசி ஆராய்ந்து விட்டு பிறகு மிராண்டாவை எழுப்புவோம்!
சரி!
வீட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் தேடி முடித்துக்கொண்ட பின்னர் கொஞ்சம் காப்பி தயாரித்து எடுத்து மிராண்டாவுக்கு புகட்டினர்.
அதைத் தொடர்ந்து...
ம்... மயக்கம் தெளிந்து விட்டது!
ஆ...அம்...மா!
அலட்டிக் கொள்ளாதே மிராண்டா...இந்தா இன்னொரு மிடறு காப்பியை குடி!
பத்து நிமிடங்களுக்குப்பின் வில்லரின் கேள்விகளுக்கு பதில் கூறுமளவுக்கு தெளிவு ஏற்பட்டுவிட்டது மிராண்டாவுக்கு.
நீயும் உன் தந்தையும் இரவு படுக்கு முன் தூக்க மாத்திரை போட்டுக் கொள்வதுண்டா?
மயும்பா ஏதோ மூலிகைகளை போட்டு தயாரித்துக் கொடுக்கும் பானத்தை அப்பா படுக்கு முன் பருகுவது உண்டு.



ஆனால் எனக்கு அந்த பழக்கமில்லே.
அப்படியானால் துப்பாக்கி வெடியோசை கேட்டும் நீ தூக்கம் கலேயாமல் கிடந்தது எப்படி?
எனக்கு சொல்லத் தெரியவில்லே.
ஏன்...அப்பாவுக்கு ஏதாவது...?
இல்லே அவர் நலமாகத்தான் இருக்கிறார்.
அடுத்த அறையில் உன்னேப் போலவே அவரும் ஆழ்ந்த நித்திரையிலிருக்கிறார்.
நீங்கள் எதையோ மறைப்பதாக தோன்றுகிறது!
நீங்கள் ஏதோ காரணமாகத்தான் இங்கே வந்திருக்க வேண்டும்...என்ன அது? சொல்லுங்கள்.
பதருதே மிராண்டா!
தலேவாங்கி இன்று வெளிப்பட்டது... நாங்கள் அதை துரத்திக்கொண்டு வந்தோம் இங்கே!
அது வீட்டினுள் நுழைந்து உங்களுக்கு தொல்லே கொடுத்திருக்கலாமோ என்ற சந்தேகத்தோடு இங்கே வந்தோம்.
இல்லே அது என் தலேயை கொய்ய ஆனமட்டும் முயற்சியை மேற்கொண்டது... பாவம் கடைசியில் தன் தலே தப்பினுல் போதும் என்று ஓடிப் போய்விட்டது?
யாராவது கொல்லப்பட்டு விட்டார்களா என்ன?


நல்லவேளை-இப்போதுதான் நிம்மதியாக இருக்கிறது எனக்கு!
பிரச்னை தீர்ந்து விட்டதாக நினைக்கிறாயா?
விடிந்ததும் தேடும் படலத்தை தொடர உத்தேசிக்கிறோம்.
எங்கள் வரவை உங்கள் பணிப்பெண் அவ்வளவாக ரசிக்கவில்லை...பலாத்காரத்தில் இறங்கினாள் கட்டிப் போடும்படியாகி விட்டது!
?
முயற்சிக்கிறேன்!
நீ போய் நாங்கள் உதவி செய்யும் நோக்கத்தோடுதான் இங்கே வந்திருக்கிறோம் என்று அவளுக்கு விளக்கிச் சொல்லேன்!
அப்பா விழித்துக் கொண்டபின் விஷயத்தை அவரிடம் கூறி அவர் அவளுக்கு எடுத்துச் சொல்லும்படி கேட்டுக்கொள்வதுதான் நல்லது.
சரி...நாங்கள் புறப்படுகிறோம். விடியும்வரை இந்த அறையை தாழிட்டுக் கொண்டு உள்ளேயே இரு.
அப்படி ஏதும் விபரீதம் நிகழ்ந்துவிடாது!
அத்தனை நிச்சயமாக எப்படி உன்னால் சொல்ல முடிகிறது.
தலைவாங்கி வீட்டினுள் புகுந்து அட்டகாசம் செய்ததில்லை.
இதுவரை அப்படியிருக்கலாம். இனிமேலும் தொடரும் என்பது என்ன நிச்சயம்
ஒருவேளை அப்படி அது உள்ளே நுழைந்தால் ஏற்படும் விபரீதத்தை கற்பனை செய்து பார்.
ஆண்டவனே!


டெக்ஸ் வில்லரும் அவரது சகாக்களும் கழுகுக் குளத்துக்கு திரும்பி வந்து சேர்ந்த போது கிழக்கு வெளுத்துக் கொண்டு வந்தது.
ஏதாவது விசேஷமுண்டா இங்கே?
இல்லை... நாங்கள் தூங்காமல் விழித்துக்கொண்டிருந்ததுதான் மிச்சம்.
மீண்டும் ஏரியின் கரையில் தீவிரமாக ஆராய்ந்தார் வில்லர்
பின்னர் மலைமுகட்டின் கீழே இருந்த பெரியபாறையில் ஏதேனும் தடையம் கிடைக்கலாம் என்ற நம்பிக்கையோடு நீந்திச்சென்று ஆராய்ந்தார்.
ஊஹூம்...பிரயோஜனமில்லை!
விசித்திரமான அந்த கால்தடம் தென்படுகிறதா என்று மீண்டும் நாலா திசைகளிலும் தேடினர்.
முடிவில், குதிரையை விட்டு இறங்கி கால் நடையாகவே மலைமுகடுவரை ஏறச் சென்று அங்குலம் அங்குலமாக ஆராய்ந்தார்கள்...



ஒரு மணி நேரத்திற்குப்பின்—
ஒரு தடையமும் இல்லையே!
ஆச்சரியம்தான்!
ஆமாம் ஆகவே அந்தக்குரங்கு மலைமுகட்டின் மீது ஏறவில்லை என்று தீர்மானமாக சொல்லிவிடலாம்.
அந்த குரங்கு இங்கே ஏறியிருந்தால் நிச்சயம் காலடித்தடம் ஏற்பட்டிருக்கும்.
மிஸ்டர் வில்லர்...புதிரை விடுவிக்கவே முடியாது போலிருக்கிறதே!
அதற்குள் மனம் தளர்ந்து விடாதீர்கள் ஷெரீப்
எதிரி மிக மிக சாமர்த்தியசாலி என்றவரை உறுதியாக தெரிகிறது.
விரைவிலேயே நம் வலையில் அகப்பட்டுக்கொள்ளச்செய்துவிட முடியுமென்று தோன்றுகிறது!
ம்...எனக்கு நம்பிக்கையில்லை!
ஷெரீப்பும் மற்றவர்களும் டெக்ஸ்வில்லரை குளத்தின் அருகே விட்டுப்பிரிந்து நகரை நோக்கி பயணமாயினர்.
புதிருக்கான விடை இங்கேதான் எங்கோ இருக்கிறது!
அங்கே பரேராவின் வீட்டில்...
அட...மயும்பாவுக்கு ஆங்கிலம் தெரிந்திருக்கிறதே!
ஏய்...குட்டிப்பிசாசே! அவர்கள் இங்கே வந்தது உன்னுடைய பிசகினால்தான்!



அப்பாவுக்கே துரோகம் செய்யத் துணிந்துவிட்ட நீ இனியும் உயிரோடு இருந்தால் ஆபத்தாகிவிடும்.
ஆ...வேண்டாம்!
உன்வாயை அடைக்க வேறு வழியே கிடையாது
நீ எனக்கு சிறு தீங்கிழைத்தாலும் என் அப்பா உன்னைக்கொல்லாமல் விடமாட்டார்.
அப்படியில்லையடி பெண்ணே!
அவர் இன்று உயிரோடிருப்பதற்கு காரணமே இந்த மயும்பாதான்! அதுமட்டுமல்ல...
மயும்பா...நில் அப்படியே!
நீ என் உயிரை அந்தநாளில் காப்பாற்றியது உண்மைதான். ஆனுல் என் மகளுக்கு சிறு தீங்கிழைத்தாலும் உன்னை நான் சும்மாவிடமாட்டேன்...ஜாக்கிரதை!
ஆண்டவனே!
மயும்பா இறந்தால் நீங்களிருவரும் உடனே மாண்டுபோவீர்கள் என்பது தெளிவாக எழுதப்பட்ட உண்மை... நீங்களும் சாகத்தீர்மானித்து விட்டீர்களா மாஸ்டர்...?
க்யூவின் ஸ்ாப்?
உன் கத்திமுனையை வைத்து நீ அழிவுக் கதையின் முகவுரையை எழுதினுல் நான் துப்பாக்கி விசையைக்கொண்டு முடிவுரையை எழுதுவேன்.
உங்களுக்கு பைத்தியம்தான் பிடித்து விட்டிருக்கிறது!


அதைத் தொடர்ந்து ஆங்காரத்தோடு கத்தியை தரையில் வீசி எறிந்த மயும்பா பரேராவை நோக்கி சுட்டெரிக்கும் பார்வை ஒன்றை வீசினாள்...
இப்போது என் கைகளை கட்டிப்போட்டது எத்தனை பெரிய தவறு என்று சீக்கிரமே புரிந்துகொள்ளத்தான் போகிறீர்கள்.
தந்தையும், மகளும் தனித்து விடப் பட்டனர்...
அப்பா! இந்த விபரீதங்களுக்கு எப்போதுதான் ஒரு முடிவு ஏற்படும்?
முடியவில்லையே அம்மா! கானகத்தினூடே அந்தக் காரிருள் சூழ்ந்த இரவில் நடந்த சம்பவங்களை அது விவரிக்கத் தொடங்கும் போது அதன் உத்தரவுக்கு கீழ்ப்படியாமல் இருக்கமுடியவில்லை.
இரவில் அந்த மாயக்குரல் கேட்பது நின்று போகும் போது!
தயவுசெய்து அந்தக்குரலுக்கு செவிசாய்க்காதீர்கள் அப்பா!
ஊஹூம்... கூடாது!
இருளின் கனம் கூடிக்கொண்டே வரும்போது வரவர உரத்துக்கொண்டே வரும் அந்தக்குரல் கடைசியில் உறுமலாக உருவெடுக்கும்போது...
...அதை சாந்தப்படுத்த மரணதேவதைக்கு ஒரு பலி வேண்டி பயணம் கிளம்பிவிடுகிறது தீயசக்தி.
இதற்கிடையே...



தொலைவில் புகை மூட்டம் ஒன்று வானோக்கி எழும்புவதை சில செவ்விந்தியர்கள் கண்ணுற்றனர்...
மருந்துவரை வரச்சொல்லி அழைக்கும் சமிக்ஞையல்லவா அது!
நான் போய் அவருக்கு தகவல் கொடுக்கிறேன்... நீங்கள் இங்கேயே இருந்து மேற்கொண்டு என்ன செய்திவருகிறது என்று கவனியுங்கள்!
ரகசியக் குகை!
அடுத்த சில நிமிடங்களுக்குப்பின் அந்த செவ்விந்தியர்களின் முகாமிலிருந்த அனைவருமே தொலைவில் எழுந்த செய்தியினை கவனித்துக் கொண்டு நின்றனர்...
முடிவில் மருத்துவன் உத்தரவுகளை பிறப்பிக்கலானான்...
தீயை மூட்டி நான் வருவதாக சமிக்ஞை கொடு!
சரி!
கழுகுக் குளத்தினருகே நான் யாரை சந்திக்கப்போகிறேன் என்று தெரியவில்லை...


மறுமுனையில்..
அதோ...! பதில் சமிக்ஞை...!
செவ்விந்திய மருத்துவன் இன்னும் சற்று நேரத்தில் இங்கே வந்துவிடுவான்.
குதிரையில் போய் அவனை எதிர்கொண்டு சந்திப்பது நல்லது!
மூன்று மணி நேரத்திற்குப் பின்—
என் பெயர் ஹாக்கை...உங்களை சந்திப்பதில் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்!
புத்திசாலி நபர் ஒருவரை சந்திப்பதில் நானும் மகிழ்ச்சியடைகிறேன் தோழரே!
என்னைப்பற்றி யாரும் உங்களுக்கு சொல்லியிருக்க முடியாது! பின்னே எப்படி அந்த புகழ்ச்சி வார்த்தையினை நீங்கள் கூற முடிந்தது?
என் கணிப்பு சரிதானே!
இங்கிருக்கும் மூத்த சகோதரர்கள் அனைவருமே அதிபுத்திசாலிகள் தான் என்பது என் கணிப்பு
என்னைப்பற்றி உயர்வான அபிப்பிராயம் கொண்டிருக்கும் உங்களுக்கு நன்றி!
வில்லர் தன்னுடைய விஸ்கி குடுவையை ஹாக்கையிடம் நீட்டினார்...
ஆகா...!
இந்தாருங்கள்...உங்கள் இளைய சகோதரனின் எளிய காணிக்கையாக இதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்!


இன்னொரு முறை வற்புறுத்த வேண்டிய அவசியமே இருக்கவில்லை ..
நிதானமாக குடித்து முடித்த ஹூக்கை குடுவையை கீழேவைத்து விட்டு வில்லரை பார்த்தான்...
இப்போது சொல்லுங்கள்...
இந்த கழுகுக் குன்றைப் பற்றிய விபரம் தெரிய வேண்டும்!
கறுப்புக் குதிரை மீது ஆரோகணித்தவாறு காரிருளில் அட்டகாசம் செய்துவரும் சைத்தானைப்பற்றி கேட்கிறீர்களா?
வேறு பல கேள்விகளை எதிர் பார்த்தேன்... அந்தப்பிசாசைப் பற்றி கேட்பீர்கள் என்று நினைக்கவேயில்லை.
அவனைப்பற்றி அல்லது அதைப் பற்றி உங்களுக்கு தெரிந்த விஷயங்களை சொல்லுங்கள்.
புராதன சிலைகள் சிதிலமடைந்து கிடக்கும் குகைக் குச் செல்லும் இரகசிய வழியை அந்த சைத்தான் தெரிந்து கொண்டிருக்கிறது.
ஓரிரவு குளத்தினருகே முகாமிட்டிருந்த எங்கள் கூட்டத்தினர் சிலர் அந்த சைத்தானின் நடமாட்டத்தை நேரில் பார்த்தது முதல் அந்தப்பக்கமே யாருமே செல்வதில்லை.
அவ்வளவுதான் தெரியும் சகோதரனே!
குளத்தினருகே எப்படி வந்தது என்று...?
இருக்கக்கூடிய ஒரே பாதையின் வழியாகத்தான்! கழுகுக்குன்றினை நீ பார்த்திருக்கிறாயல்லவா?
ஆமாம்!
அப்படியானால் பாறைகளினூடே இருக்கும் பெரிய மரத்தை பார்க்கவில்லையா?



ஆமாம்...பார்த்திருக்கிறேன்! அதாவது நீங்கள் சொல்வதைப் பார்த்தால்
சரியாகப் புரிந்து கொண்டு விட்டாய் சகோதரனே!
ஆமாம்...அந்த பருத்த அடிமரத்தில்தானிருக்கிறது இரகசியபாதை!
அந்தக் குரங்கு தடையமின்றி மாயமாக எப்படி மறைந்து போக முடிகிறது என்று இப்போது விளங்குகிறது!
அடுத்த ஒருமணி நேரத்தில் உரையாடிக்கொண்டே மீதமிருந்த விஸ்கியை கொஞ்சம் கொஞ்சமாக ஊற்றிக் கொண்ட ஹூக்கை குடுவை காலியானதும் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினான்...
ஆண்டவன் உனக்கு அருள் பாலிப்பாராக!
புத்திமான் ஹூக்கை நீடுழி வாழ்க
இப்படி ஊற்றிக்கொண்ட பின் கீழே விழுந்து விடாமல் சவாரிசெய்ய எப்படித்தான் சாத்தியமாகிறதோ இவனுக்கு?
சரி...இனி புயல் வேகத்தில் மோர்லோஸுக்கு சென்று ஷெரீப்பை சந்திக்க வேண்டும்...ஆராய்ச்சியின் அடுத்த கட்டத்தை அவருடைய உதவியோடுதான் தொடர முடியும்!
மூன்று மணி நேரத்திற்குப்பின் -
ம்...தனியாகவா போகப் போகிறீர்கள்- ஆபத்தல்லவா!
இல்லை...நான் சொல்வதுபோல் நீங்களும் உங்கள் உதவியாளர்களும் செய்தால் ஆபத்து கிடையாது!



எங்களை நீங்கள் முழுவதுமாக நம்பி செயல் படலாம்!
எனக்கு இந்த வார்த்தைகள் போதும்-அங்கே ரொம்ப இயல்பாகவே நடந்து கொள்ளுங்கள்!
கவலையே வேண்டாம்! இருள் கவிழ்ந்த பின்னும் நீங்கள் வரத்தவறினால்...?
நான் நிச்சயமாக வந்துவிடுவேன்!
அரை மணி நேரம் கழித்து ஷெரீப் தன் சகாக்கள் பத்து பேரோடு பரேராவின் வீட்டை நோக்கி பயணமானார்...
அதே வேளையில் டெக்ஸ்வில்லர் கழுகுக்குளத்தை நோக்கிச் சென்றார்...
இந்நேரம் ஷெரீப் பரேராவின் வீட்டிற்கு போய்ச் சேர்திருப்பார்... இனி நான் வந்த வேலையை தொடங்கலாம்!
அங்கே—
ஹலோ ஷெரீப்! ஏதாவது அசம்பாவிதமா ?
இல்லை மிஸ்டர் பரேரா!
இங்கே நாங்கள் என்னதான் செய்து கொண்டிருக்கிறோம் என்று உங்களுக்கு சும்மா ஒரு தகவல் தந்து விட்டுப்போகலாமே என்று வந்தோம்.



இன்னும் அந்த ஆவியைத்தான் தேடியலைந்துகொண்டிருக்கிறீர்களா?
ஆமாம்!
நல்ல பொழுதுபோக்குதான் போங்கள்! தாகமாக இருப்பீர்கள்...ஏதாவது பானம் பருகுகிறீர்களா?
ஆனால் அது இன்னொருமுறை வெளியே தலை காட்டத்துணியுமேயானால் அது ஆவியல்ல...இரத்தமும் சதையும் கொண்ட உருவம்தான் என்று நிரூபித்து விடுவோம்!
இதற்கிடையே தன் மேலாடைகள், துப்பாக்கி ஆகியவற்றை ஒரு கான்வஸ் பைக்குள் திணித்து எடுத்துக்கொண்டு குளத்தினூடே நீந்திச் சென்றார் டெக்ஸ் வில்லர்.
சில நிமிடங்களுக்குப்பின் ஹூக்கை குறிப்பிட்ட பிரம்மாண்டமான அடிமரத்தை நெருங்கி விட்டார்.
இதோ...திறந்து கொள்கிறது!
முதல் கட்டம் வெற்றி!
மிகுந்த எச்சரிக்கையோடு உள்ளே நுழைந்து நடந்தார்.
துப்பாக்கியை வெளியிலெடுத்து அதை தயார் நிலைக்கு கொண்டு வர அவர் மறந்து விடவில்லை!



மாயக்குரங்கே இப்போது வா என் எதிரில்! இம்முறை என் தோட்டாக்கள் ஈரமாகி செயலிழந்து போயிருக்கவில்லை!
சில நிமிடங்களுக்குப்பின் குகையினுள் புராதன சிலைகள் சிதிலமடைந்து கிடந்த இடத்தை நெருங்கி விட்டார்!
மண்டை ஓடுகள்! சைத்தானின் கொலை வெறிக்குப் பலியானவர்களுக்குச் சொந்தமானவைகளாக இருக்கக்கூடும்!
குரங்கு எங்கே? மிருக நடமாட்டம் இருக்குமிடமாக தெரியவில்லையே இது!
சிறிது நேரம் தயங்கிய பின்னர் ஒரு தீவட்டியை கொளுத்தி சுவரில் பொருத்தினர் டெக்ஸ்வில்லர்...
...அடுத்து குகையின் இன்னொரு பகுதியை ஆராய அவர் திரும்பியபோது-
அதோ!
சட்டென்று மின்னல் வேகத்தில் துப்பாக்கியை உருவி எடுத்து உயர்த்தி குறி தவறுமல் சுட்டார் வில்லர்...
டுமீல்!
பட்! பட்! பட்!
...சரமாரியாக சீறிக் கொண்டு கிளம்பிய தோட்டாக்கள் எதிரியை தீர்த்துக் கட்டிவிட்டன...
ஒழிந்தது!



அட...இது குரங்கின் தோல் மட்டுமே!
இதோ...இங்கே கிடக்கும் இந்த பாதணிகள் விநோதமான பாதச்சுவடுகளுக்கு விளக்கம் கொடுக்கின்றன!
குதிரைக்கு நான்கு-தனக்கு இரண்டு...விசேட தயாரிப்புகள்! பிரமாதமான ஏமாற்று வேலைதான்!
ம்...ஏற்கனவே நான் கொண்டிருந்த கணிப்பை மறுபரிசீலனை செய்யவேண்டிய அவசியம் ஏற்படுகிறது!
யாரோ ஒரு விஷமி குரங்கு ஒன்றை அனுப்பி இந்தக் கொலைகளை செய்து வர தூண்டவில்லை.
கொலைகாரன்தானே குரங்கு போல் மாறுவேடம் பூண்டு இந்த அட்டகாசத்தை செய்து வந்திருக்கிறான்
அது யாராக இருக்கும் என்று இன்னும் தீர்மானமாக சொல்ல முடியவில்லை என்றாலும்.
சீக்கிரமே கண்டுபிடித்து இயலும் என்று நிச்சயமாகத் தெரிகிறது-


தொடர்ந்து குகையினுள் மேலே நடந்தார் வில்லர் இறுதியில் ஒரு மரக் கதவு தென்பட்டது...
இதன் பின்னால்...?
மிகுந்த எச்சரிக்கையோடு கதவை திறந்து கொண்டு வெளியே வந்தார்...
குதிரை லாயம்...!
பரேராவின் குதிரை லாயம்!...இதோ நிற்கின்றன டயாக்கும் மிராண்டாவின் பெஸ்ஸியும்!
இனி கொலைகாரனை சிக்க வைக்க ஒரு சூழ்ச்சியை திட்டமிட வேண்டும்.
அரைமணி நேரம் கழித்து மீண்டும் மேலாடைகளை அணிந்து கொண்டு பரேராவின் வீட்டை நோக்கி குதிரையில் விரைந்தார் வில்லர்!
கொலைகாரனுக்கு தூண்டில் போடப்போகிறேன்...
பத்து நிமிடங்களுக்குப்பின்...
ஹே...அதோ டெக்ஸ்வில்லர் வந்துவிட்டார்!



என்ன தேடிக் கொண்டிருக் கிறீர்கள் ஜார்ஜ்?
வேறென்ன அந்த மாயப் பிசாசின் காலடி தடங்களைத்தான்!
உருப்படியாக எதையாவது கண்டுபிடித்தீர்களா?
ஒரு பேயைக் கண்டேன்!
நிஜமாகத்தான் சொல்கிறீர்களா?
ஆமாம்...ஆனல் இப்போ தைக்கு மேற்கொண்டு எது வும் சொல்வதற்கில்லை
ஷெரீப் இங்கு தானே இருக் கிருர்?
ஆமாம்! முடமாகி நாற்காலி யோடு கிடக்கும் அந்த அப் பாவி மனிதரோடு உரையாடிக் கொண்டிருக்கிருர்.
நல்லது! நகருக்கு திரும்பிச் செல்ல ஆயத்தமாகுங்கள்!
பின்னர்...
வணக்கம்...நான் இடைஞ் சலாக வந்து விடவில்லையே?
ஏதாவது அகப் பட்டதா?
இல்லை! இங்கே நம் நேரத்தையும் சக்தி யையும் விரயமாக்கிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை என்று தோன்றுகிறது! ஸ்ட்ரீம்லேன் ஆற்ருேரப் பகுதிக்குச் சென்று ரியோ பிண்டோ செல்லும் வழியில் தேடிப்பார்த்தால் பலன் இருக்குமென்று தோன்றுகிறது!


அப்படியானால் நாம் உடனே அங்கே செல்வோம்!
இல்லை...இப்போதைக்கு நகருக்கு திரும்பிச் செல்வோம்...
ம்...
...தரை ரொம்பவும் காய்ந்து இறுகிப் போயிருப்பதால் காலடி தடம் எதையும் இப்போது கண்டுபிடிக்க வகையில்லை ஆட்களை திரட்டிக்கொண்டு வந்து தலைவாங்கியை வெட்டவெளியில் விரட்டி மடக்க முயற்சிப்போம்!
இது ஆபத்தான காரியமில்லையோ?
தலைவாங்கியை எதிர்த்து போராட வேண்டும் என்று நான் சொல்லவில்லை...
...பின்தொடர்ந்து சென்று அதன் மறைவிடத்தை கண்டறிந்தாலே போதுமானதாகும்...
உங்கள் முயற்சி வெற்றி பெற என் வாழ்த்துக்கள்...
அப்படியே செய்யலாம்!
சில நிமிடங்களுக்குப்பின் அனைவரும் நகரை நோக்கி பயணமாயினர்...
கொலையாளி யாராக இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?
ஒரு யூகம் இருக்கிறது...ஆனால் அது சரியா தவறா என்று இனிமேல்தான் நிரூபனம் ஆகவேண்டும்!


அன்று மாலை டெக்ஸ்வில்லர் ஷெரீப்பையும் மற்றோரையும் உடனழைத்துக்கொண்டு நகரை விட்டு மீண்டும் வெளியே கிளம்பினர்.
அல்மைரா வரை எல்லோரும் ஒன்றாக செல்வோம். அங்கே குதிரைகளோடு இரண்டு பேரை நிற்கச் செய்துவிட்டு மற்றவர்கள் தனித் தனி கூட்டமாக பிரிந்து ஆற்றின் கரையோரமாக செல்வோம்!
ஓசை எழுப்பாமல் கழுகுக்குளத்தை சென்றடைய வேண்டும்... நாம் வந்து காத்துக்கொண்டிருப்பது தெரிந்து விட்டால் கொலையாளி வெளிக்கிளம்பாமலே பதுங்கிக்கொண்டு விடக்கூடும்... நாம் வந்த காரியம் கெட்டுவிடும்.
உண்மைதான்!
அந்த சைத்தானின் அட்டகாசத்துக்கு இன்று ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட இயலுமென்று நம்புகிறேன்.
அதிர்ஷ்டம் நம் பங்கில் இருக்க வேண்டும்!
அரை மணி நேரம் கழித்து...
அவசியம் ஏற்பட்டாலன்றி யாரும் சுடக்கூடாது... என்ன?
அதாவது எதிரி தாக்கினால் மட்டுமே- அப்படித்தானே!



குரங்கு வேடம் தரித்த ஒரு மனிதன் தான் கொலையாளி என்ற வரை உறுதியாகி விட்டது...வேடம் தரித்த நிலையில் வேகமாக ஓட முடியாது.
நான் அவனை நோக்கி கூச்சலிடும் போது அவன் நீரினுள் நின்று கொண்டிருப்பான் - அது ஒரு இடைஞ்சல்...அவனுக்கு!
மேலே சொல்லுங்கள்!
என் குரல் கேட்டதும் சட்டென்று தீவட்டிகளை கொளுத்துங்கள்.
அப்படியே செய்து விடலாம்!
பின்னர் இரண்டு தொகுதிகளாக பிரிந்து ஆற்றின் இரு கரைகளின் வழியாக கழுகுக் குளத்தை நோக்கி ஓசைஎழுப் பாமல் நடந்தார்கள்.
பதினைந்து நிமிடங்களுக்குப்பின் ஒவ்வொருவரும் தங்களுக்கு நிர்ணயிக்கப் பட்ட இடத்தில் பதுங்கிக்கொண்டனர்...
மிக்க எதிர்பார்ப்புடன் சுமார் மூன்று மணி நேரம் காத்துக் கிடந்த பின்னர்...
மரத்தினருகே சலனம் ஏற்படுகிறது...வெளியே வருகிறான் என்று நினைக்கிறேன்!


?
குதிரை பின்னே வர கொலையாளி குளத்தில் இறங்கி மெள்ள முன்னேறி வந்தான்.
ஏ...மாயக்குரலே... ஏன் இப்படி ஓலமிடுகிறாய்...உன் பலிபீடத்திற்கு 'இரை' தேடிச் சென்று கொண்டிருக்கிறேன்!
குளத்தின் மையப் பகுதிக்கு குரங்கு வந்து சேர்ந்தபோது அங்கு நிலவிய அமைதியைக் கிழித்துக்கொண்டு ஆணையிட்டது ஒரு முரட்டுக்குரல்.
நீ யாராக இருந்தாலும் சரி...அப்படியே நில்-நகர்ந்தாயோ நாசமாகி விடுவாய்!
சட்டென்று குளக்கரையில் தீவட்டிகள் ஜகஜ்ஜோதியாக எரியத் தொடங்கின...
தான் அகப்பட்டுக் கொண்ட பொறியின் தன்மையை ஆராய்வதுபோல் இடமாகவும் வலமாகவும் திரும்பி நிதானமாக ஆராய்ந்தது அந்தக் குரங்கு...
ஏகப்பட்ட ரைபிள்கள் தன்னை குறி வைத்துக் கொண்டிருப்பதை கொஞ்சமும் இலட்சியம் செய்யாமல் குதிரையை நோக்கி வேகமாக நகர்ந்து தன் முரட்டு வாளை கையிலெடுத்துக் கொண்டது.


யாயா ஆஆஹீஹீஈஈ... டயாக்...டயாக்!
என்ன தைரியம்! நேராக நம்மை குறிவைத்து வருகிறானே!
ஆஈஈயாஹாஆஆ!
கண்ணிமைக்கும் பொழுதில் அவனுடைய மூளையை சிதறடித்து விடுவேன்.
ஊஹூம்...கூடாது!
அந்த கத்தியை குறிவை... போதும்! அவனை நிராயுத பாணியாக்கு!
டயாக்! டயாக்!
ஆனால் வில்லர் குறிப்பிட்டுச் சொல்லியிருந்தும் எதிர்கரையிலிந்தவர்கள் சுடத்தொடங்கி விட்டனர்,
டுமீல்!
சைத்தான் எதிர்கரையிலிருக்கும் நம்மவர்களைக் குறிவைத்து செல்கிறது!
சுடுங்கள்!


கண்ணிமைக்கும் பொழுதில் ஏகப்பட்ட தோட்டாக்கள் பாய்ந்தன...
ஆ...!
சுடுவதை நிறுத்துங்கள்!
இதற்கிடையே... அதே வேளையில்—
தோட்டாக்களின் முழக்கம்! மாஸ்டருக்கு ஆபத்து...!
வேகமாகப் போ...ம்... இன்னும் வேகமாக!
ஸார்,...சற்று உற்றுக் கேளுங்கள்!
?
ஆஆயாயாஹீஹீஈ...!


பிசாசு!
ஆ ஆ...!
நீ சுட்டிருக்கக் கூடாது...ஜார்ஜ்!
அந்தச் சனியன் சுட்ட தோட்டா ஒன்று என் செவியை உராய்ந்து சென்ற பின்னும் எப்படி நான் வாளாவிருப்பது?
நீ கொன்றது ஒரு பெண்ணை!
அவளுடைய ஓலத்தை நீ கேட்கவில்லையா?
பெண்ணா?... அப்படியானால்...
வாருங்கள் அருகில் சென்று பார்க்கலாம்...அவளுக்கு காயம் மட்டுமே ஏற்பட்டிருக்கலாம்!
நீங்கள் சென்று பாருங்கள்...நான் தலைவாங்கியின் உடலை கரை சேர்க்க முயற்சிக்கிறேன்.
ஓ...கே!
மற்ற இருவரின் உதவியுடன் கொலையாளியின் உடலை கரையில இழுத்துப்போட்ட வில்லர் எதிரியின் முக கவசத்தை நீக்கிறார்...
பரேரா!!
யாரும் கொஞ்சமும் எதிர்பார்த்திருக்க முடியாது!



அவர்கள்வீட்டை நெருங்கியதும்...
மிராண்டா!
மறுவினாடி—
நீங்கள் இப்போது இங்கே வந்து சேர்ந்தது அதிர்ஷ்டம்தான்! 'மயும்பா என்னைக் கொல்ல முயன்றாள். கதவை தாழிட்டுக் கொண்டு விட்டதால் தப்பினேன்!
இனி மேயும்பாவினால் உனக்கு தொல்லை ஏற்படவே ஏற்படாது!
ஏன் இறந்து விட்டாளா?
ஆமாம்...
என் தந்தை?
ஸாரி...அவரை உயிரோடு பிடிக்க முடியாமல் போய்விட்டது!
கலங்காதே...எல்லாமே நல்லதுக்குத்தான் என்று எண்ணி மனத்தை தேற்றிக் கொள். அவர் மனநோயாளி தானே?
ஆ...ஆமா...ம்!
போர்னியோவில் டயாக் இனத்தவர்எங்களுடைய பண்ணையில தீயிட்டு, கொன்று குவித்தபோது அப்பாவின் மனம் பேதலித்து விட்டது...
நான் அப்போது வேற்று ஊரில் பள்ளியில் பயின்று கொண்டிருந்தேன்...அந்த இரவில் நடந்த கொடுமையை நான் கேட்டறிந்தேன்...
பண்ணைகள் நிறைந்த தீவை கைப்பற்றும் நோக்கோடு இரத்தப் புரட்சி ஒன்றை மேற்கொண்ட உள்ளூர்வாசிகள் கடலோரப் பண்ணைகளில் தங்கள் வெறியாட்டத்தை தொடங்கினர்...



முதலில் தாக்கப்பட்ட பண்ணைகளில் எங்களுடையதும் ஒன்று.
ஆ...
உதவி!
பண்ணை ஊழியர்கள் எத்தனை முயன்றும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை...
யாயாஆஆஹீஹீ...!
ஈவு இரக்கமின்றி கொன்று குவிக்கப்பட்டனர்... அப்பா கைது செய்யப்பட்டார்!
அம்மாவையும் உடன் இழுத்துச் சென்று விட்டனர்... மீண்டும் காட்டுக்கு திரும்புமுன் எங்கள் வீட்டை தீயிட்டுக் கொளுத்தத் தவறவில்லை அவர்கள்.
அதன் பின்னர் நடந்தது என்ன என்று யாராலுமே நிச்சயமாக சொல்ல முடியவில்லை... ஏனெனில் இராணுவ அணி ஒன்று அப்பாவையும், மயும்பாவையும் கண்டுபிடித்து காப்பாற்றியபோது
அப்பா பைத்தியமாகி விட்டிருந்தார்...
மற்ற விபரங்கள் மயும்பா சொல்லித்தான் தெரிய வந்தது - தன்னுடைய அப்பா நாட்டாமையாக இருந்த ஒரு கிராமத்தில் அவள் என் அப்பாவை சந்தித்து காப்பாற்றியதாக, சொன்னாள்.



அதன் பிறகு மனநோய் விடுதி ஒன்றில் அப்பா நீண்டகாலம் சிகிச்சை பெற்றிருக்கிருர்! விடுதியை விட்டு வெளியே வந்தபோது அப்பாவின் நிலைமையில் ஓரளவுதான் முன்னேற்றம் இருந்தது.
பகலில் மிக சாதுவாக இருக்கும் அவர் இரவு கழிந்ததும் எப்போதோ நடந்து முடிந்த பயங்கர சம்பவங்களுக்கு சாட்சியாக இருந்த அவர் கையில் அகப்பட்டதை தூக்கி எறிந்து ஆர்ப்பாட்டம் செய்வார்...
போ.. போய்விடு உன்னை சும்மா விட மாட்டேன்...!
அப்பாவிடம் ஈடுபாடு கொண்டிருந்த மயும்பாவோடு போர்னியாவை விட்டு அகன்று பிரேசில் போய்ச் சேர்ந்தோம். அங்கே பல வருடங்கள் நிம்மதியாக வாழ்ந்தோம். என் அப்பா வேகமாக தேறிக்கொண்டு வந்தார்.
அப்போது ஒருநாள்- நாங்கள் வசித்து வந்த அந்த சின்னஞ்சிறு கிராமத்தில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது...அந்தக்கிராமத்தை சேர்ந்த ஒருவன் வெட்டுண்டு இறந்து கிடந்தான்.
உன் அப்பாவினுல் தானு?
ஆமாம்...அவருடைய அறையை சுத்தம் செய்யச் சென்ற மயும்பாதான் இரத்தம் தோய்ந்த கத்தி ஒன்று அலமாரியில் இருப்பதை பார்த்திருக்கிருள்.
என் அப்பாவை நான் காட்டிக் கொடுக்க முடியுமா?
அவரை மீண்டும் மருத்துவ விடுதிக்கு கொண்டு போய் சேர்த்திருக்கலாமே!
அப்படிச் செய்வதும் அவரை சவக்குழிக்குள் புதைப்பதும் ஒன்றுதான் என்று தோன்றியதால் அப்படிச் செய்யவில்லை நான்,



அதன்பின் அவர் அசம்பாவிதம் ஏதும் செய்துவிடாமலிருக்க கூடுதல் முயற்சிகளை மேற்கொண்டேன்.
மயும்பா என் முயற்சிக்கு உதவி செய்வாள் என்று நம்பியதுதான் மாபெரும் தவறாகிப்போனது... கொடூர நெஞ்சம்கொண்ட அவளுடைய கண்ணோட்டத்தில் அப்பாவின் செய்கைகள் நியாயமாகப்பட்டன.
இந்த இடத்துக்கு நாங்கள் வந்து சேர்ந்த நாள்தொட்டு அவரை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர என்னால் ஆனமட்டும் முயற்சிகளை மேற்கொண்டேன்.
என் முயற்சிகளை மிக தந்திரமாக முறியடிக்க தெரிந்து கொண்டிருந்தார் அவர்.
அதற்கு மயும்பாவும் உதவி செய்திருக்கக்கூடும்!
ஆமாம்... அவளும் எந்தந்தையும் ஈருடல் ஓர் உயிர் என்று சொன்னால் மிகையாகாது! இருவருடைய சிந்தனையும் ஒரே மாதிரி இருந்தது...
உன் பயங்கர அனுபவங்கள் இப்போது ஒரு முடிவுக்கு வந்துவிட்டன... இந்தப் பகுதியில் வாழும் அப்பாவி மக்களின் பிரச்னையும் நிரந்தரமாக ஓய்ந்து போய் விட்டது.
தந்தை மீது கொண்டிருந்த பாசத்தால், சட்ட விரோத காரியங்களை நீ செய்து வந்திருக்கிறாய்
அனைத்தையும் நாங்கள் மன்னிக்கத் தயார்-நீ இங்கிருந்து அகன்று எல்லையைத்தாண்டி சென்று விடுவதானால்.
நன்றி! நாளை காலை பொழுதுவிடியும்போது நான் இங்கிருந்து வெகு தொலைவு சென்று விட்டிருப்பேன்!
முற்றும்.


இரட்டை
வேட்டையர் தோன்றும்
ஆப்பிரிக்க சதி!
ரூ. 2/-
டிசம்பர் வெளியீடு
பாக்கெட் சைஸ்!
லயன்
காமிக்ஸ்



# லயன் காமிக்ஸ் வாசகர்களுக்கு ஓர் இனிய செய்தி!

# லயன் காமிக்ஸ் ஆசிரியர் S. விஜயன், ஐரோப்பிய விஜயம்!

காமிக்ஸ் மற்றும் குழந்தைகள் பத்திரிக்கை வளர்ச்சிப் பணியை மேற் கொண்டு ஒருமாத காலம் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்ய கடந்த 29—9—1985 தேதியன்று ஆசிரியர் **S. விஜயன்** புறப்பட்டுச் சென்றார்.

லண்டனிலிருந்து வாசகர்களாகிய உங்களுக்கு அனுப்பிய புகைப்படத்தையும், கடிதத்தினையும் அச்சிட்டுள்ளோம்.

அவரது சுற்றுப் பயணம் ஆண்டவன் அருளுடன் வெற்றி பெற வாழ்த்துவதுடன், வாசகர்களின் நல்லாசியையும் வேண்டுகிறோம்.

நிர்வாகி,
**லயன் காமிக்ஸ்.**

PHONE : Off : 1159
Res : 159

# LION COMICS

Post Box : 55,
SIVAKASI - 626 123

Date 10-10-85
லண்டன்

அன்பார்ந்த லயன் காமிக்ஸ் வாசகர்களே!

உங்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த தீபாவளி வாழ்த்துக்கள்! இந்த மடலை லண்டன் மாநகரில் தேம்ஸ் நதிக் கரையில் அமர்ந்து உங்கள் அன்பை ஆதரவை – மனக்கண்ணில் நிறுத்தி வரைகிறேன். இங்கிலாந்தில் உங்கள் அபிமானத்திற்குரிய கதாநாயகர்களான ஸ்பைடர், ஆர்ச்சி ஆகியோரின் படைப்பாளிகளைச் சந்திப்பதுடன், பல்வேறு பதிப்பகங்களுடன் தொடர்பு கொண்டு தமிழ்நாட்டுக் காமிக்ஸ் ரசிகர்களுக்கு தரமான, விறுவிறுப்பான, அற்புதமான விருந்து படைப்பதே என் நோக்கம்.

அடுத்த வெளியீடான ''ஆப்பிரிக்க சதியில்'' புதிய வெளியீடுகள் குறித்த அறிவிப்புகள் உங்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தும். நீங்கள் விரும்பினால் எனது பயண அனுபவங்களை வரவிருக்கும் இதழ்களில் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

எனது முயற்சிகள் வெற்றிபெற இறைவன் அருளையும், உங்கள் நல்லாசியையும் நாடும்.

உங்கள்

S. Vijayan

ஆசிரியர்.


விச்சு &
கிச்சு
விச்சு, என்ன தைரியத்தில் சென்றவார நிகழ்ச்சிக்குப் பின் அந்த வேட்டை குழுவுடன் வர என்னை அழைக்கிறாய்?
கிச்சு, அவர்கள் சைக்கிளி செல்ல அழைத்ததை நீயா தவறாக வேட்டைக்கு அழைத்ததாய், குதிரையி வந்தாய், யார் தப்பு?
இம்முறையும், தவறு செய்து விடாதே! விரும்பினால் அதே இடத்துக்கு அதே நேரத் திற்கு வா!
தவறு நிகழாது!
இம்முறை சென்று அவர்களுக்கு என் சைக்கிள் திறமையை காட்ட வேண்டும்!
இதோ, சைக்கிளை ரேசுக்குத் தயார் செய்து விட்டேன்!
ஐயாவைப் பார்த்தால் அவர்கள் மத்தியில் ஒரு நல்ல சைக்கிள் வீரன் இருப்பதை உணர்வார்கள்!


அந்த மூலைக்கு விரைந்து சென்று அவர்களை ஆச்சரியத்தில் மூழ்கடிப்பேன்!
ஓ...!
ச்சு, நான் வேட்டை நாய்களுடன் சவாரி செய்வதாய் ல்லவோ கூறினேன்!
க்ர்ர். ர்ர்


உஷார்!!
விரைவில் வருகிறார்!
இரும்புக்கை
உளவாளி!
லயன்
காமிக்ஸ்
லயன் காமிக்ஸி
மற்றொரு சூப்ப
அறிமுக


தீபாவளி
ஸ்பெஷல்!
லயன்
காமிக்ஸ்